# சரஸ்வதிமஹாலும் தஞ்சை வரலாறும்

ஆசிரியர் :

O. A. நாராயணசாமி B. A., B. L.,

# சரஸ்வதிமஹாலும்

# தஞ்சை வரலாறும்.

தஞ்சை மகாராஜா சரபோஜி
ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக
கௌரவ காரியதரிசி
**O. A. நாராயணசாமி, B. A., B. L., அவர்களால்**
வெளியிடப்பட்டது.

15 JUN 1985

உக்கடை ஸ்ரீ அம்பாள் பிரஸ், தஞ்சாவூர்.
**1964.**

விலை 60 ந. பை.



SRI SARFOJI MAHARAJA

1798-1832

श्री शरफोजि नृपालः

# சரஸ்வதிமஹால் - தஞ்சை

## வரலாற்றுச் சுருக்கம்.


### சரபோஜி மன்னர் சரஸ்வதி மஹால்

ஆதிகாலத்தில் தஞ்சையைத்தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழமன்னர், இப்பிரதேசத்தை தென்நாட்டு நெற்களஞ்சியயமாகத் திகழச்செய்தனர். அத்துடன் மாபெரும் ஆலயங்களையும், இணையற்ற சிற்பங்களையும், போற்றி வளர்த்ததுடன், சேது மார்க்கம் முழுதும் ஏராளமான சத்திரங்களையும் நிறுவி தஞ்சையை தர்ம ராஜ்யமென் விளங்கச் செய்தனர். பின் வந்த நாயக்க மராட்டிய மன்னரும் இவற்றைப் போற்றி வளர்த்த துடன், சங்கீதம், நாட்டியம் ஆகிய கலைகட்கும் பெரு மாதரவு அளித்து, அறிவுக் களஞ்சியமாகிய **'ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தை'** த் தோன்றச் செய்து உலக புகழ்தேடித் தந்துள்ளனர். இந்நூல் நிலையம் நாயக்கர் மன்னர் காலத்தில் தோன்றியதாயினும், நாளாவட்டத் தில் சேகரிக்கப்பட்டுள்ள அருமையான ஏட்டுச்சுவடி களுடன், வேறெங்கும் கிடைக்கக்கூடாத சிறந்த நூல் களையும் பெயர் பெற்ற பல நூல்கள் யாவற்றின் பிரதி களையும் மிக்க ஊக்கத்துடன் சேர்த்து, சிரத்தையுடன் பாதுகாத்து, என்றென்றும் போற்றற்குரிய பெரும் பொக்கிஷமான இந்நிலயத்தை தஞ்சையின் ஜோதியாக மிளிரச் செய்துள்ளபெருமை மன்னர் சரபோஜியையே சார்ந்ததாகும்.

தஞ்சை அரண்மனையில் ஏறக்குறைய மையமாக விருக்கும் பகுதியில் அமைந்துள்ள இந்நூலகத்திற்குள் புகுமுன் தஞ்சை மன்னர் வழிபட்டுவந்த புராதனமான ஆஞ்சநேயமூர்த்தியையும், விநயகரையும் மேல்புறத்தில் தரிசித்துக்கொண்டு செல்லலாம். சரஸ்வதிமகாலின் வாயிலில் மிகப்பெரிய இராமர் படம் ஒன்றும் மகா கணபதிபடம் ஒன்றும் சில நூற்றாண்டுகளுக்கு முன் சுவற்றில் தீட்டப்பட்டபோதிலும் வர்ணங்கள் குன்றாமல் அப்படியே காட்சியளிக்கின்றன. இராமர் படத்தை சுற்றி சோழ, நாயக்க, மராத்திய வமிச அரசர்கள் மூவரின் உருவங்களும் காணப்படுகின்றன. இச் சித்திரம் மராத்தியர்கள் காலத்தில் சரபோஜி மன்னரின் காலத்தில் வரையப்பட்டவையென ஊகிக்கப்படுகிறது.

இந்நூலகத்தில் உள்ள நூல்களின் விரிவான பட்டியல் ஒன்று தயாரித்து அச்சிடும் பணியை ஏற்றுக்கொண்ட பர்னல் (Dr. Burnell) எனும் மேனாட்டார் கி. பி. 1871ல் இப்புராதன நூலகத்தைப்பற்றி கூறுவதாவது :– "உலகத்திலே மிகப் பெரியதும் மிக்க முக்யத்துவம் கொண்ட நூலகம்" என்றும் "மற்ற இந்திய நூலகங்களில் கிடைக்கப்படாத அரும் நூல்களின் ஒரே பிரதிகளை ஏராளமாகக் கொண்டது" என்றும் அபிப்ராயப் பட்டுள்ளார்.

பிற்காலத்தில் பூலர் (Dr. Bhuler) எனும் மேனாட்டு வடமொழி புலவர், இங்குள்ள ஏராளமான ஏட்டுப்பிரதிகளையும் சுவடிகளையும் பற்றி கூறுவதாவது "மிகவும் பயன் தருபவையும், எங்கும் கிடைப்பதற்கரியதுமானதும், மிகச் சிறந்ததும், விலைமதிக்க முடியாததுமான ஏட்டுச் சுவடிகள், இந்நூலகத்தில் உள" மேனாட்டாரின் மதிப்பில் இந்நூலகம் இப்பேற்பட்ட கௌரவம் அடைந்திருக்கிறது.




சரஸ்வதிமஹால் உள்புறத்தோற்றம்.


நூலகத்தில் வரிசை வரிசையாக பெரும் மரஅல மாரிகளும், எஃகு பீரோக்களிலும் நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. நூலகத்தில் காலடி எடுத்து வைத்த உடனேயே பண்பாடுள்ள மனது வாய்ந்தோர், நூலகத்தின் பெரும் தொன்மையையும் ஏட்டுச்சுவடி களின் பழமையையும் கண்டே மெய்மறக்கின்றனர் இந்திய கலாசாரம் மிகப் புராதனமானது. ஆயினும் இப்பழைமையின் ஊடே, மின்னல் போன்ற புதுமை ஒன்று என்றுமழியாது மிளிர்கிறது. அன்றும், இன் றும் உலக மக்கள் யாவருமே இந்நூலகத்தை கண்ட பிறகு மரியாதையுடன் வியப்பெய்துகின்றனர்.

வடமொழி நூல்கள் சோழர்கள் காலத்திலிருந்து பேராதரவுடன் வளர்ந்தன. நாயக்க வமிசத்து மன் னர்கள் காலத்திலும் பல நூல்கள், வட மொழிலும். தெலுங்கு மொழியிலும் இயற்றப்பட்டு சரஸ்வதிமகால் நூலகத்தில் சேர்க்கப்பட்டன. மராத்தியர் காலத்தில் வடமொழி, தமிழ், தெலுங்கு, மராத்தி, ஹிந்தி போன்ற பல பாஷைகளிலும் பலதர நூல்கள் உருவாகி நூல கத்தின் வளர்ச்சிக்குக் காரணமாயின. அதன் பிறகு இந்திய மொழிகளில் மாத்திரமே நூல்களையும் ஏட்டுப் பிரதிகளையும் கொண்டிருந்த இந்நூலகம் கி. பி. சுமார் 1763-ல் துளஜா மகாராஜா அவர்கள் காலத்தில் மேனாட்டு மொழிகளில் இயற்றப்பட்ட நூல்களையும் ஏற் றுக்கொண்டது. பின்னர் கி. பி. 1798-ம் ஆண்டு தஞ்சை ஆட்சியை ஏற்றுக்கொண்ட சரபோஜி மன்னர் காலத்தில், பல மொழி நூல்களும். பலமொழிகளில் ஏட்டுப் பிரதிகளும் மன்னர் சரபோஜியினுல் சேமிக்கப் பட்டு இந்நூலகம் 'உலக அதிசயங்களில் எட்டாவது' எனப் போற்றற்குரியதாயிற்று. மன்னர் சரபோஜி, தாய் நாட்டு மொழிகள் பலவற்றில் பாண்டித்யம் பெற் றிருந்தது மட்டுமின்றி, மேல்நாட்டு மொழிகளாகிய லத்தீன், க்ரீக். பிரஞ்ச், ஆங்கிலம் போன்ற பலமொழி களிலும் வல்லுநராக விருந்தமையாலும் தன் வாழ்


நாளையே, இந்நூலகத்தைச் சிறப்பித்து இதை உலக மக்கட்களுக்கு அறிவை வளர்க்கும் மகோன்னத ஸ்தாபனமாக உருவாக்க அர்ப்பணித்தார். ஆதலின் இப்பெரும் கல்விமானின் பெயர் இந்நூலகத்தின் பெயருடன் இணைக்கப்பெறறுத் திகழ்கிறது. நூலகத்தின் எந்தப் பிரிவிற் நோக்கினும், அப்பிரிவிற்காக மன்னர் சரபோஜியின் தொண்டுதான் முன்னணியில் தோற்றமளிக்கிறது.

**ஏட்டுச்சுவடிகள் :–**

மிகவும் புராதனமான ஏட்டுச்சுவடிகள், வேறு நூலகங்களில் கிடைக்கதற்கறிய நூல்கள் பல சரஸ்வதி மகாலில் காண்கிறோம். முக்யமான சிலவற்றை கண்ணாடிப் பெட்டிகளில் சீராய் அடுக்கி அதற்கான விளக்கப் பலகைகளுடன் காண்கிறோம். இவைகளில் வடமொழி சுவடிகள் எண்ணிக்கையில் மிகுந்தவை. எண்ணிக்கையில் மட்டுமின்றி அவைகள் பலவித விஷயங்களைப் பற்றியவைகளாக உள. வேதாந்த சாத்திரம், வேதங்கள், தத்துவ சாத்திரங்கள், அரசியல் நூல்கள். இலக்கியம், காமசாத்திரம், மருத்துவம், இலக்கணம். சங்கீதம், விஞ்ஞானம் மற்றும் பல துறைகளிலும் எண்ணிறந்த நூல்கள் இப்பகுதியில், தேவநாகரி அல்லது கிரந்த எழுத்துக்கொண்ட ஏட்டுப்பிரதிகளிலும், ஓலைச் சுவடிகளிலும் காண்கிறோம். ஏட்டுப்பிரதியில் இருக்கும் நூல்களில், கஜசாஸ்திரம். அசுவசாஸ்திரம் இவ்விரு நூல்களைப்பற்றி மட்டும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. வடமொழியில் மூலத்தையும், மராத்தியில் மொழியாக்கத்தையும் கொண்ட இவ்விருநூல்களில் மராத்திய மன்னர்கள் செய்யுளில் கண்டவாறு, ஓவியங்களை பல நிறங்களில் தீட்டச் செய்துள்ளனர். பழமையான வர்ணங்களை கொண்டு சித்தரிக்கப்பட்டுள்ளன இவைகளில் உள்ள ஓவியங்கள். அவைகளின் எழிலும், புதுமை குன்றாத வர்ண ஒளியும், மிக்க போற்றத்



யானைகளைப் பிடிக்கும் முறை




சரபோஜி மன்னரின் குதிரைகளில் ஒன்று.



உபரந்தரம் என்னும் இடத்தில் சுழியுள்ள குதிரை



குதிரைமீது ரதிதேவி - மகளிர் குழாத்தினல் ஆக்கப்பெற்ற தோற்றம்.



நான்கு தந்தங்களும் ஆறு தந்தங்களும் உள்ள திக்கஜங்கள்.

தக்கவை. அதிசயப்படக்கூடத்தக்கவை. முன்னேற்றம் ஓங்கிக்கொண்டிருக்கும் இந்நாட்களிலும், தன்பழைமையை சிறிதளவும் தோற்றத்தில் வெளியிடாது, புத்தம்புது ஒளியைக்காட்டும் இவ்வர்ணங்களின் சேர்க்கை இன்னும் விளங்காத புதிராகவே இருக்கிறதென்றால் மிகையாகாது. "ஏல்" எனும் அமெரிக்க பல்கலாசாலை ஆராய்ச்சியாளர், தான் வெளியிட்டுள்ள புத்தகமொன்றில் "கஜசாத்திர" நூலைப்பற்றிப்புகழ்கிறார். "ஆநந்த கந்தம்" என்ற நூல் இரசவாதத்தை விஷயமாகக் கொண்டிருப்பினும் பலவேறு விஷயங்களைக்கூறும் ஓர் விஞ்ஞான நூல். இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் ஆராய்ச்சிக்குறியவை. "ரத்தின பரீக்ஷை" எனும் சிறு நூல் நவரத்தினங்களைப்பற்றி கூறுகிறது. இப்படியே, "தர்மாகூதம்" என்ற வடமொழி நூல். இராமயணத்தில் உள்ள நுட்பங்களை தெளிவாக்குகிறது.

ஆதிசங்கரரால் இயற்றப்பட்ட "பிரபஞ்சசாரம்" எனும் அரிய மந்திர நூலிற்கு இயற்றப்பட்ட ஓர்சிறந்த விளக்க நூல் "பிரபஞ்ச சாரசாரசங்கிரஹம்". இவைகளில் பல, நூலகத்தாரால் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப்பகுதி**

தமிழின் புராதனப் புகழை பல ஆசிரியர்கள் பல நூல்களில் விளக்கியுள்ளனர். சோழர்கள் காலத்திய நூல்கள் பல நாம் இங்கு காண்கிறோம். கம்பஇராமாயணம், ஐம்பெருங் காப்பியங்களில் சிலவற்றின் பிரதிகள் இவைகள் எங்கும் கிடைக்கும் நூல்களைத்தவிர திருச்சிற்றம்பலக்கோவையார் தனி உரையுடன்கூடிய நூல், திருவாய்மொழி வாசகமாலைனும் ஓர் விளக்கநூல் பெருந்தேவனர் பாரதத்தின் 'மாவிந்தம்' என்றப்பகுதி, இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முதலியவைகள் இந்நூலகத்தில் உள்ளன.

இப்பகுதியில் சரபோஜி மன்னர் காலத்து இயற்றப்பட்ட 'சரபேந்திரவைத்யமுறைகள்' என்றபெயருடை நூல்களைக் காணலாம். மருத்துவ ஆராய்ச்சி சாலை ஒன்று பலவகை மருத்துவநிபுணர்களைக்கொண்டு 'தன்வந்தரி மஹால்' என்ற பெயருடனும் இயங்கியதாகவும், அங்கே நடந்த ஆராய்ச்சியின் பயனாய், நீரிழிவு, க்ஷயம், குன்மம். போன்ற கொடியநோய்களை தவறாது அகற்றக் கூடிய முறைகளை சரபோஜி கண்டறிந்ததாகவும் தெரிகிறது. இம்முறைகள் தமிழ்பாடல்களாகத் தொகுக்கப்பட்ட நூலே சரபேந்திரவைத்ய முறைகள்.

தவிரவும் சோதிட சம்பந்தமான நூல்கள், இலக்கிய நூல்கள், வடமொழி நூலாகிய சௌந்தர்யலஹரி போன்ற நூல்களின் மொழியாக்கங்களும், பரதநடனத்திற்குகந்த குறவஞ்சிகளும் இப்பகுதியில் காண்கிறோம்.

**தெலுங்குப்பகுதி**

இப்பகுதியில் தஞ்சையையாண்ட நாயக்க மன்னர்களால் இயற்றப்பட்ட பல நூல்களும் தவிர பிற்காலத்தில் ஆண்ட மராத்திய மன்னர்களாலும், அவர்கள் காலத்திலும் நாயக்கர்கள் காலத்திலும் ஆதரிக்கப்பட்ட புலவர்களின் நூல்களும் உள.

சோழ வமிசத்தினரான 'கட்டவரதராஜுவின் இராமயணம்' என்ற நூல் அச்சடிக்கப்பட்டு கல்லூரிகளில் பாடபுத்தகமாக அமையப்பட்டுள்ளது. நாயக்கர் காலத்தில் தஞ்சையில் 'யக்ஷகானங்கள்' எனும் நாடகங்களுக்கு ஊக்கமளிக்கப் பட்டது. பல 'யக்ஷகானங்களை' தெலுங்கு மன்னர்களும், மற்ற கவிகளும் பெருமளவில் இயற்றி அவைகள் ஆங்காங்கு நடிக்கப்பட்டு வந்தன வென்றும் தெரிய வருகின்றன.

ரகுநாதநாயக்காப்யுதயமு என்னும் தெலுங்கு நூலை விஜயராகவ நாயக்கர் என்னும் நாயக்கவமிசத்து

மன்னர் எழுதினர். இதில் சரஸ்வதி மகாலைப்பற்றி கூறப்பட்டுள்ளது. இந்நூல் சுமார் நானூறு வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட மையினுல் சரஸ்வதிமகாலும் நானூறு ஆண்டுகட்கு முற்பட்டதென்பதை அறிகிரேம். தவிரவும் மராத்தியர்கள் காலத்தில் தெலுங்கு மொழிக்கு பிராதான்யம் கொடுக்கப்பட்டது. தெலுங்கு புலவர்களுக்கு ஆதரவு அளித்ததுமின்றி, மராத்திய மன்னர்களும் தெலுங்கு மொழியில் பல நூல்களை இயற்றியுள்ளார். முக்யமாக ஷஹாஜிராஜன், திருவாரூர் தியாகராஜ சுவாமிகளைப்பற்றி பாடியுள்ள தெலுங்கு கீர்த்தனைகள் குறிப்பிடத்தக்கவை. சல்லா சூரையா எனும் தெலுங்கு புலவர் இயற்றிய விவேக விஜயம் என்னும் நூல் வேதாந்த நூல்களில் சிறந்ததென கருதப்படுகிறது. இன்னும் மராத்திய மன்னர் ஏகோஜியினுல் செய்யப்பட்ட இராமயணம். நாராயண தீர்த்த ஸ்வாமிகளால் இயற்றப்பட்டதும் வேறு எங்கும் கிடைக்காததுமான 'பாரிஜாதாபஹரணமு' என்னும் தெலுங்கு நூல்கள், முக்கியமானவைகளில் சில. இப்பகுதியில் காணும் சுவடிகளில் மிகவும் பழமையானது 'காளஹஸ்திமாஹாத்யமு' எனும் நூல் இதன்காலம் கி. பி. 1449-எனவும் தெரிய வருகிறது.

**மோடிப்பகுதி**


சுவடிகளும், ஏட்டுப் பிரதிகளும் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பக்கத்தில் அமைந்திருக்கும் தனிப்பகுதியில் இப்பகுதி தற்போது இருக்கிறது. கிட்டதட்ட ஆயிரம் துணி மூட்டைகளில் மோடி ஏடுகள் கட்டிவைக்கப்பட்டுள்ளன. மோடி என்னும் லிபி அநேகமாக மராத்திய தேசத்தில்தான் வழங்கி வந்தது. மராத்திய மன்னர்கள் காலத்தில் தனக்கென எழுதி வைத்துள்ள குறிப்புகளும், கணக்குகள், நியாயஸ்தல விசாரணைத் தீர்ப்புகள், கடிதப் போக்குவரத்துக்கள், வருமான வினங்கள், அரண்மனையில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்

கள் முதலியனவும் இவ்வேடுகளில் காண்கின்றன. தஞ்சை மராத்திய சரித்திர ஆராய்சிற்கு இவைகள் பெரிதும் பயன்படக்கூடியவை. இவ்வெழுத்துக்களை அறிந்தோர் சென்னை மாநிலத்தில் மிக்கச் சிலரே. இவைகளினின்று முக்யமானவற்றை பிரசுரம் செய்ய நூல் நிலயத்தார் முயற்சி செய்து வருகின்றனர்.

### மராத்திப்பகுதி

இப்பகுதியில் காணும் நூல்கள் அநேகமாய், பாரதம், இராமாயணம், பாகவதம், இதிகாசங்கள், இலக்கியம், இலக்கணம், மருத்துவம், நாட்டியம், சங்கீதம், ஜோதிடம், காமசாத்திரம் ஆகியவைகளைப்பற்றியவை. இப்பகுதியிலுள்ள நூல்கள் எல்லாமே, ஏட்டுப் பிரதிகள். மராத்தியர்கள் காலத்தில் காகிதம் செய்யும் தொழிலும் அச்சுத்தொழிலும் முன்னேறிக் கொண்டு வந்தன. ஆகையால் அநேகமாக காகிதப் பிரதிகளே பெரும்பாலும் இப்பகுதியிலுள்ளவை. இயந்திர மூலம் காகிதம் உற்பத்தி செய்யுமுன், குடிசைத் தொழில் முறையில் கையினுல் தயாரிக்கப்பட்ட காகிதங்களில் இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. தஞ்சையையடுத்த மன்னார்குடியில் 'காகிதக்காரத்தெரு' என்ற ஓர் தெருவில் இத்தொழிலாளர்கள் மான்யம் வழங்கப்பட்டு இத்தொழிலை வளர்த்தார்கள். இப்பகுதியிலுள்ள ஏட்டுச்சுவடிகளில் பலவற்றில், நூலின் பகுதியை விளக்கும் படம் ஒன்று, முதல் ஏட்டில் அட்டைப்படமாக காட்சியளிக்கிறது இயற்கை வர்ணங்களை எழில்மிக்க நுட்பத்துடன் சித்தரிக்கும் இவ்வோவியங்களைக் கண்டு களிக்காதார் யார்? தங்க நிறங்கள் பூசப்பட்ட இந்த சித்திரங்கள் மிகவும் சிறப்புவாய்ந்தவை.

இப்பகுதியில் அநேகமாய் தஞ்சை மராத்திய மன்னர்களால் இயற்றப்பட்டவைகளும், அவர்கள் காலத்திய புலவர்களால் இயற்றப்பட்டவைகளும், பல முற்



பிரெஞ்சு ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட
சாமுத்திரிக சாஸ்திரத்திலிருந்து
சில மாதிரி படங்கள்.



பிரெஞ்சு ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட சாமுத்திரிக சாஸ்திரத்திலிருந்து
சில மாதிரிப் படங்கள்

காலத்திய ஏட்டுப்பிரதிகளின் நகல்களும் இருக்கின்றன. தவிரவும் ஹிந்திபாஷைகளில் இயற்றப்பட்ட சிறுசிறு நூல்களும் இப்பகுதியில் காண்கிறோம். தமிழில் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தை ஆதாரமாகக் கொண்டு மராத்தியில் "பக்தவிலாசம்" என இயற்றப்பட்ட நூலும் மகாராஷ்ட்ர பக்தர் ஏகநாதர் வமிசத்தில் வந்த மாதவஸ்வாமிகள் இயற்றிய பாரதம், பாகவதம், பக்தசிரோமணியாகிய மேருஸ்வாமியார் இயற்றிய "ராமஸோஹளா", சரபோஜி மன்னரால் இயற்றப்பட்ட "சரபேந்திர வைத்ய ரத்னவளி", அம்பர் ஹுசேன் என்ற முகமதியரால் இயற்றப்பட்ட "ஹுசேனம்பரி" எனும் பகவத்கீதையின் விரிவுரை பல மராத்தியக்ஷகானங்கள், ஹிந்தியக்ஷகானங்கள் இவைகள் இப்பகுதியில் குறிப்பிடக்தக்கவை.

## ஓவியங்களும், கலைநுட்ப சுவடிகளும் ஏட்டுப்பிரதிகளும்

கண்ணாடிப்பெட்டிகளில் கண்காட்சிக்காக வைக்கப்பட்ட கலைப்பொருள்களைப்பற்றி முன் குறித்தோமல்லவா? அவைகளில் முக்கியமான சிலவற்றைக் கவனிப்போம்.

### ஓவியங்கள்

நூலகத்தில் நிற்கும் ஒவ்வொரு தூண்களிலும் ஓர் படத்தைக் காண்கிறோம். இவைகளில் இந்திய நகரங்களை சித்தரிக்கும் பல படங்களும், லண்டன் மகாநகரத் தோற்றங்களை சித்தரிக்கும் படங்களும், சீன தேசத்திலிருந்து வந்த பழைய தண்டனை முறைகளையும் நாம் காணலாம். மனிதவர்கத்தினரின் முகத்திற்கு விலங்கின முகத்திற்குள்ள ஒற்றுமையை விளக்கும் பல படங்கள், எல்லோருரையுமே கவருகின்றன. இவைகள் 'சார்லஸ்லெபர்ன்' எனும் பிரஞ்சு ஓவியக்காரரால்

தீட்டப்பட்டவை. ஹிமாலயப் பகுதிகளின் உன்னதத் தோற்றங்களையும் ஓர் ஆங்கிலேய சைத்திரீகர் வெகு திறமையுடன் சித்தரித்துள்ளார்.


கண்ணாடிப் பெட்டியில் வைத்துள்ள ஓவியங்களை சற்று நோக்குவோம்.

இராமாயணச் சம்பவங்களை சித்தரித்துக் காட்டும் அப்படம் எவ்வளவு உயர்த்தியான கலை நுட்பங்கள் பொருந்தியுள்ளது! இவ்வளவு சிறிய உருவத்தை எழுதி அதில் உணர்ச்சிகளை தத்ரூபமாக அல்லவோ வெளிப்படுத்தி இருக்கிறான் இக் கலைஞன். மராத்தியக் காலத்துப்படம் தான் அது.


இது என்ன செம்பருத்திப்பூவா? நிறத்தில், ஏன், உருவத்திலும் துளிக்கூட வித்தியாசமற்று விளங்குகிறதே இப்படம். மேலும் பூக்கள், செடிகள் அவைகளின் இயற்கை நிறங்களுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது இப்புத்தகம். பழைய நூல்களில் சொல்லப்பட்ட பல மூலிகைகளின் அடையாளம் இப்போது நமக்குத்தெரிவதில்லை. இதே போல் பின்னோர்களும் தவிக்கக்கூடாதென்பதன் பொருட்டு முக்கியமானதும், வழக்கத்திலுள்ளதுமான பல செடிகள், இலைகள், பூக்கள் இவைகளை அவைகளின் இயற்கை வர்ணத்துடன் சித்திரம் தீட்டி அவைகளைப் பத்திரப் படுத்தினார் தான் போற்றி வளர்த்த சரஸ்வதி மகாலில் சரபோஜி. தன் வசமுள்ள பறவைகளையும் படத்தில் வரைந்துவைக்க செய்தார். மராத்தியர் காலத்து அங்கிகள். பல்லக்குகள் இவைகளைப்பற்றியும் சித்திரப்பகுதியில் காண்கிறோம்.

ரிக்வேதம் எழுதப்பட்ட ஏட்டுப்பிரதிகளில் ஒவ்வோர் தொகுப்பிலும் படங்கள் கண்ணைக்கவருகின்றன.


மராத்தி பகுதியிலுள்ள பாகவதம், பாரதம் இவ்விரண்டிலும், கதைப்பகுதிகளையொட்டி எழுதியுள்ள அழகான படங்கள் யார் மனதைக் கவரவில்லை?



மன்னர் சரபோஜி வளர்த்த வேட்டைப் பறவை.



ரிக் வேதங்கள்



மேலே - ஸ்ரீசுகர்பரீக்ஷிந்துக்கு பாகவதம் உபதேசிக்கிருர்

கீழே - பாரதப்போரில் கண்ணன் சாரதியாகக் காட்சி யளிக்கிருர்.



மேலே - சத்ரபதி சிவாஜியும் ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் ஸ்வாமியும்
கீழே - அரிய வியாகரணச் சுருக்கம் எழுதிய ஆசிரியர் நாராயண ஸாஸ்திரி

பல வர்ணங்களில் காணும் மீன்களைப்பற்றிய புத்தகம் ஒன்று நம் வியப்பை அதிகரிக்கிறது.

வர்ணங்களின்றிக் காணப்படும் பல சித்திரங்கள், விலங்குகளைப் பற்றியும், கடல்வாழ் பிராணிகளைப்பற்றியும், தாவர சாத்திரங்களைப்பற்றியும், மனித உடற்கூற்று நூலாகவும் திகழ்கின்றன. இவைகள் எல்லாம் சரபோஜி மன்னர் அரும்பாடுபட்டுச் சேகரித்தவை.

அதோ, பட்டமடிக்கப்பட்டு கண்ணுடிக்குள் வைக்கப்பட்டுள்ள அந்தநூல் என்னவெனபார்ப்போம். சாதாரணப் பார்வைக்கு தேவநாகரியில் எழுதப்பட்ட சாதாரண செய்யுளாகத் தெரியும், இவ்வேடுகளில் நிறைந்துள்ள கலைநுட்பம் எல்லோரையும் வியப்படையச் செய்கிறது. பூதக் கண்ணுடியின் உதவியால் இவ்வெழுத்துக்களை உற்று நோக்கின் ஒவ்வோர் எழுத்துக்களிலும், சிற்றெறும்புபோன்று, "சிவ–சிவ" என்ற கணக்கற்ற தேவநாகரி எழுத்துக்களின் கூட்டம் இருப்பது விளங்கும். வெள்ளைத்தாளில் கருப்பு எழுத்துக்கள் போன்று, கரும்தாள்களில் வெள்ளை எழுத்துக்கள் எழுதப்பட்ட ஏடுகள், மேலும் தமிழ் நூல்கள் தேவநாகரி லிபியிலும், தெலுங்கு லிபியிலும் எழுதப்பட்டவை பல இங்கே உள. அதேபோல் தமிழ் எழுத்தைக்கொண்டு மராத்தியிலும் தெலுங்கிலும் எழுதப்பட்ட நூல்களையும் இங்கு காண்கிறோம். தாசபோதம் எனும் ஓர் மகத்தான மராத்தி நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழாக்கம் தேவநாகிரி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. இதை நூல்நிலையத்தார் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்.

பல அரண்மனைகளின் வாயில்புரத் தோற்றங்களை எல்லாம் ஒருங்கே சேகரித்து வைத்தப்படப் புத்தகம் ஒன்று மிக உபயோகப்படத்தக்கது நூலகத்தில் இருக்கிறது.

இவ்வளவும் நாம் கண்கூடாக பார்க்கும் விஷயங்கள். நூலகத்தைப்பற்றி முழுமையும் கூறுவது எனில் அது மிகச்சிரமமான காரியம். பற்பலபகுதிகளிலுள்ள பல நூல்கள், குறிப்புகள், தனிஏடுகள், இவைகள், பலதுறை ஆராய்ச்சியாளர்களுக்கு அநேக வழிகளில் உதவும் என்பதில் ஐயமில்லை. பழங்காலத்து பொருள்களைக் காப்பாற்றிவைக்கும் ஓர் காட்சிசாலையாகவே, இது இன்னும் கருதப்பட்டு வருகிறது. சரஸ்வதிமகாலை தற்போதைய நிலைக்குக் கொண்டுவர ஏதுவாயிருந்த சரபோஜி மன்னரின் மேதை இதை ஈடில்லா ஆராய்ச்சி சாலையாகத் திகழவைக்கவேண்டியே, மகத்தான தியாகங்களையும் ஏற்க முற்பட்டது. இம்மகோன்னத இலக்ஷியத்தைப் பூர்த்திசெய்வதில் நம் நாட்டு மக்கள் எல்லோரும் கடமையுணர்ச்சியுடன் ஈடுபடவேண்டும்.

### அச்சுப்புத்தகங்கள்

கிட்டதட்ட **14000** அச்சுப்புத்தகங்கள் நூலகத்தில் சேகரிக்கப்பட்டுள்ளன. இவைகளில் ஆங்கிலப்புத்தகங்கள் **7000**-ம், வடமொழியில் **3000**-ம், தமிழில் **2300**-ம், தெலுங்கில் **500**-ம், மராத்திமொழியில் **2000**-ம் ஆகும். ஆங்கிலப் புத்தகங்கள் கி. பி. 1820-லிருந்து நாளதுவரைமேலும் சேர்க்கப்பட்டு வருகின்றன. இவை இரு பகுதிகளாகக் கொள்ளலாம்;— மன்னர் சரபோஜியின் காலத்தில் சேமிக்கப்பட்டவைகளில் அரிய இலக்கியங்கள், அகராதிகள், விஞ்ஞானப் புத்தகங்களின் முதற் பதிப்புகள் நிரம்பியுள்ளன. மன்னர் சரபோஜி இப்புத்தகங்கள் எல்லாவற்றிலும் தன்கை ஒப்பமும் தேதியும், சிலவற்றில் வருடமாத்திரமும் எழுதி வைத்துள்ளார். பல பிரதிகளில், அதில் கண்ட விஷயங்களைப் பற்றி தன்னுடைய அபிப்பிராயத்தையும் பக்கங்களில்காணும் இடைவெளியில் எழுதி இருக்கிறார். இதைக்கொண்டு தன்னால் வரவழைக்கப்பட்ட நூல்கள்

எல்லாவற்றையுமே அவர் உன்னிப்பாய்ப் படிப்பது வழக்கம் என உறுதி கூறலாம். தவிரவும், பிரஞ்சு, கிரீக், லத்தீன், ஜர்மன் ஆகிய மொழிகள் இவரால் நன்கு கற்கப்பட்டிருந்தமையால் இம்மொழியில் வெளியாகியுள்ள நூல்களையும் அவர்தருவித்து தன் சரஸ்வதி மகாலில் சேகரம் செய்துவைத்தார். அவர் காலத்தில் அதாவது அவர் அரசு ஏற்றது முதல், வாழ்நாட்களின் இறுதிவரையிலும், மேநாடுகளில் வெளியாகிய சிறந்த நூல்கள் எல்லாமே அவரால் தருவிக்கப்பட்டன எனக் கூறலாம்.

பிற்காலத்திலும் அச்சுப்புத்தகங்கள், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் அவ்வப்போது சேர்க்கப்பட்டு வருகின்றன.

பழைய ஆங்கிலப் புத்தகத்தொகுதியில், ஜான்சன் என்பாரின் அகராதி, லவாசியர் எனும் ரசாயன சாத்திர விஞ்ஞானியால் எழுதப்பட்ட ரசாயனநூல், அப்படியே புகழ்பெற்ற ஆங்கில கதாசிரியர் சர் வால்டர்ஸ்காட் அவர்கள் இயற்றிய ராக்பீ (Rokeby) போன்ற நூல்களின் முதற்பிரதிகள் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

சம்ஸ்கிருதம், மராத்தி முதலிய பகுதிகளில் சரபோஜி மன்னரின் அச்சகத்தில் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களும் இருக்கின்றன. அச்சுத்தொழில் தென்னிந்தியாவில் முன்னேற்றமடையுமுன்பே கற்களாலாகிய எழுத்துக்களை கொண்ட அச்சு முனைகளைக் கொண்ட அச்சகம் ஒன்று சரபோஜி மன்னர் நிறுவி இருந்ததாகத் தெரிகிறது. மேலும், ஈய முகப்புக்களைக் கொண்ட முன்னேற்றமடைந்த அச்சு எழுத்துக்களையும் அவர் லண்டன் நகரத்தினின்றும் வரவழைத்ததாகத் தெரிய வருகிறது. இவ்வச்சகத்தில் அச்சான 'சிசுபாலவதம்' எனும் மகாகாவியம், 'குமாரசம்பவ சம்பு' எனும் சமஸ்கிருத நூலும், பாவார்த்த ராமா

யணம் எனும் மராத்தி நூலும் குறிப்பிடத்தக்கவை இம்மாதிரி மன்னர் சரபோஜியின் அச்சகத்திலேயே அச்சிடப்பட்ட பல நூல்களும் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

உலகத்திலேயே பெரும் கல்வி, கலாசாரப் பொக்கிஷமாக விளங்கிவரும் இந்நூலகம் மன்னர் சரபோஜிக்குப்பின் சிவாஜி மன்னராலும், அன்னாருடைய சந்ததியாராலும் பாதுகாக்கப்பட்டு வந்தது. பின் நேர்ந்த வழக்கில் பிராதில் விவாதத்திற் குட்பட்டதாகக் கண்டிருந்த இந்த நூலகத்தை, இதுப்பொது உரிமையாக ஆக்கத்தக்கதென்பதை உணர்ந்து, உரிமைகொண்டாடிய நூறுக்கு மேற்பட்ட கட்சியினர் யாவரும், பிராதினின்றும் இந்நூலகத்தை விலக்கி, ஒரு லட்சம் ரூபாய் நிதியுடன் ஒதுக்கி வைத்து, ஐவர் அடங்கிய டிரஸ்ட் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, இப்போது பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள அரிய, விலைமதிக்க வியலாத கலை திரட்களை மிக்கசிரத்தையுடன் கண்காணித்துக் காப்பதுடன் அதை பொது மக்களுக்குப் பயன்படுவண்ணம் அரசினர் உதவியுடன் அச்சிட்டு வெளியிடப்பட்டு சுமார் 120 புத்தகங்கள் வெளியாகியுள்ளன.

இன்னும் நாட்டில் பலவிடங்களில் பண்டைய காலத்து வித்வான்கள் ஆராச்சி செய்து எழுதி வைத்துப்போன ஒலைச்சுவடிகள் கவனிப்பாரற்று வீணவதை சேகரித்து நூலகத்திலுள்ள பண்டிதர்களைக் கொண்டு ஆராயச்செய்து, அவற்றில் நன்மதிப்புள்ள வற்றை வெளியிட ஏற்பாடு செய்வதும் முக்யமானதொரு அலுவலாகும். இம்மாதிரியுள்ள பழய கிரந்தங்களைச் சேகரித்து நூலகத்திற் சேர்ப்பிப்பது, அறிவு வளர்ச்சியில் அக்கரை கொண்ட மக்கள் இயக்கக் கூடிய நர்பணியாகும்.




சரஸ்வதிமஹால் ஆராய்ச்சி குழுவினர்.

## தஞ்சை சரித்திரம்.

புராண காலம் தொட்டு புகழ்பெற்று, சோழசாம் ராஜ்யத்தின் தலைநகரென்றும் தென்னாட்டின் நெற் களஞ்சியமென்றும் பெயர்பெற்று விளங்கிவரும் தஞ்சை மாநகர் பற்றிய கோர்வையான ஆராய்ச்சி பூர்வ வரலாறு கிடைத்தற்கரிது.

ஆகவே, காலப்போக்கை ஒட்டி, அக்கால சோழர் களைப்பற்றி சிறிது கூறி சரித்திர ஆசிரியர்களால் ஒத் துக் கொள்ளப்பட்ட காலத்தினின்று இச்சரித்திரத்தை துவக்கினேம்.

புராணங்கள், மனுநீதிச்சோழன், இராஜகேசரி, பரகேசரி, இராஜேந்திரமிருத்துஜித்து, வியாக்ரகேது, அரிகாலன் முதலியவர்கள் ஆண்டனர் எனக் கூறுகின் றன. இவர்களின் பெயர்களை அறிகிறேமெனினும் அவர் கள் ஆண்ட காலத்தை பிழையின்றி நிர்ணயிக்கதக்க ஆதாரங்களைத் தேடுவது சிரமசாத்யமாகப் புலப்படு கிறது.

சங்க காலத்து நூல்களாகிய "பத்துப்பாட்டு, பட்டி னப்பாலை", இவைகளில் கரிகாலன் என்ற ஓர் சோழ வமிசத்து அரசனையும், அவன் ஆட்சியைப்பற்றியும் ஓரளவு அறியலாம். கோவில்வன்னி எனும் ஓர் சிற்றூர் தஞ்சை நகருக்கருகாமையிலமைந்துள்ளது. இதை 'வன்னி' என்ற பெயருடன் பழங்காலத்து நூல்கள் குறிப்பிடுகின்றன. இவ்விடத்தில் பாண்டியருடையதும் சேரர்களுடையதுமான மிக்கபெரிய படை ஒன்றை முறி யடித்து அவன் மாபெரும் வெற்றிப்பெற்றதாக இங்

நூல்கள் பாடுகின்றன. தமிழகத்தை நெடுங்காலம் ஆட்சிபுரிந்த மூவேந்தர்களாகிய, சேர, சோழ, பாண்டியர்களிடை அடிக்கடி பகை ஏற்படுவதும், போர் ஏற்படுவதும் சகஜமாகி இருந்தது. சிற்சில சமயங்களில் சோழர்கள் வெற்றிகாணுவிடினும், மற்றைய இரு மன்னர்களுடைய ஆளுகைக்குக்கீழ் அவர்கள் பலநாட்கள் பணிந்து இருந்ததில்லை. இராமாயணகாலம் முதற்கொண்டு சோழர் வம்சத்தரசர்கள் மங்காப்புகழுடன் கி. பி.3–ம் நூற்றுண்டு வரை செல்வாக்குடன் அரசுபுரிந்தனர். பதினும் நூற்றுண்டின் முற்பகுதியில் சிற்றரசர்களாகி அரசு புரிந்த சோழ வம்சம் பெரும்பாலும் நசித்துவிட்டதென சொல்லலாம்.

சோழர்கள், பூம்புகார், தஞ்சை, உறையூர், கங்கைகொண்ட சோழபுரம் இவைகளைத்தங்கள் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். கி. பி. நான்காம் நூற்றுண்டு வரை வளர்புகழுடன் செங்கோல் புரிந்தசோழர்கள் நான்காம் நூற்றுண்டில் பல்லவர்களுடைய ஆதிக்கத்தின்கீழ் சிற்றரசராகவே ஆண்டுவந்தனர். பல்லவர்களின் வன்மை கி. பி. 9-ம் நூற்றுண்டின் இறுதியில் குன்றி நிருபதுங்கவர்மன் என்ற பல்லவனையும் பிரதிவிபதி என்னும் சிற்றரசனையும் தோற்கடித்து, சோழர்கள் தன் முன்னேர்கள் அடைந்த சிறப்பைத் திரும்பவும் அடைந்தனர். தஞ்சையை தலைநகராகக் கொண்டு ஆண்ட முதலரசன் விஜயாலயன். கி. பி. 849ல் பல்லவர்களை புறங்காட்டி ஓடச்செய்து வெற்றி பெற்றார். தஞ்சையை தலைநகராகக் கொண்டார். ஓர் வளரும் இராஜ்யத்தின் தலைநகராகத் தகுதி தஞ்சைக்கு இருந்ததென்றல், தஞ்சைநகரம் கி. பி. 849 ஆண்டிலேயே மிக்க உன்னத நிலையிலிருந்திருக்க வேண்டுமென ஊகிக்கலாம். சோளசம்பு எனும் வடமொழிநூல் குலோதுங்கன் என்ற சோழவரசனைப் பற்றி கூறுகையில் கரிகாலச் சோழன், குலோத்துங்கனின் ஆருவது தலைமுறையில் வந்தவன் என்றும், விண்ணுற்றங்கரையின் தென்

புரம், தஞ்சை நகரம் முன்னேற்றமடைந்த தசை யிலிருந்ததாகவும் விளக்குகிறது. குலோத்துங்கனின் காலவரையை சிக்கலின்றி நிர்ணயிக்க முடியுமானல்' தஞ்சையின் வரலாற்றையும் ஓரளவு அக்காலத்தி லிருந்து ஆராய ஏது கிடைக்கலாம்.

**விசயாலயன்**

விசயாலயன், பரகேசரி எனப்பெயருடன், போற் றப்படுகிருன். திருப்பரம்பியம் போரில், பாண்டியர் களே வென்றதுமன்னியில், முத்தரையர்கள் என்னும் சிற்றரசர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றினர் தஞ்சையை அடுத்த செந்தலே அக்காலத்தில் முத்தரை யரின் இராஜதானியாகவிருந்தது. தஞ்சைமாநகரில் துர்கையின் கோவில் ஒன்றும் இவருல் கட்டப்பட்ட தென்று தெரியவருகிறது. திருப்புறம்பியம் போர்காலம் சுமார் 849 கி. பி. யாக கருதப்படுகிறது. கி. பி. 850 லிருந்து கி. பி. 870 வரை விசயாலயச்சோழன் பதவிபி லிருந்தார்.

முதல் ஆதித்தன், விஜயாலனின் புதல்வர். இவரது காலம் கி. பி. 871லிருந்து கி. பி. 907 வரை ஆகும். முற் கால சோழரது மகோன்னத பதவியைத் திரும்பவும் சோழவமிசத்திற்கு ஸ்தாபித்துக் கொடுத்தது இவரே. அரைசூர், திருப்புறம்பியம், வேம்பில் இத்தலங்களில் நிகழ்ந்த போர்களில் ஐந்து நூற்றுண்டுகள் தலேதூக்கி நின்ற பல்லவ சாம்ராஜ்யத்தின் கொடி இறக்கப்பட்டு, புலிக்கொடி வானளாவியது. பல்லவர்கள் இதன்பிறகு தலேதூக்கவில்லே. ஸஹ்யமலே அடிவாரத்திலிருந்து, பொன்னிசூழ் நாடுவரை தன்வெற்றிச் சின்னமாக அநேக சிவன் கோவில்களே ஆதித்தன் கட்டுவித்தார். தொண்டைமண்டலத்தை வென்று கொங்கு தேசத்தில் ஆதிக்கம் செலுத்திய மேற்கத்திய கங்கர்களேயும் தோற்

கடித்தார். தற்போதைய சித்தூர் ஜில்லாவில் காளஹஸ்தி எனும் ஊரில், ஆதித்தன் இறுதி எய்தினர்.

**பராந்தகன்** (கி. பி. 907–953):

முதலாம் ஆதித்ய சோழனுக்கு பராந்தகன், கண்ணரதேவன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். பராந்தகன், தந்தைக்குப்பின் அரசு புரிந்தார். சோழமண்டலத்தை விஸ்தரிப்பதில் தன் தந்தையைப்போலவே பற்றுடையவர். இவர் பட்டத்திற்கு வரும் காலத்திலேயே சோழவரசு, தற்போதைய சென்னை மாநிலம், ஆந்திரப்பிரதேசத்தின் சிலபகுதிகள், தெற்கில் காவிரி ஆறுபாயும் நாடு, மேற்கில் மைசூரை தவிர்த்து, மேற்குக்கடலோரப்பிரதேசம் வரை பரவி இருந்தது. பராந்தகன் கன்னியாகுமரி வரை தன் நாட்டில் சேர்த்துக் கொண்டதுமின்றி, ஈழநாட்டின்மீது படை எடுத்தார். பாணர்கள், வைதும்பர்களையும் தனது செங்கோலின் கீழ் கொணர்ந்தார் தற்கால ஆந்திரப்ரதேசத்தில் நெல்லூர்வரை அவர் ஆளுகையின் கீழ் இருந்தது. பரந்தாகனுக்கு, மதுரை கொண்டசோழன் என சிறப்பு பெயர் சூட்டப்பட்டது. பாண்டியர்களையும் வென்று அவர்களை தன்கீழ் திறை செலுத்துபராக்கினர்.

கி. பி. 940ம் ஆண்டிலிருந்து சோழமண்டலத்திற்கு வலுவான எதிரிகள் தோன்றத்துடங்கினர். ராஷ்ட்ரகூட தலைவனான மூன்றும் கிருஷ்ணன் சோழநாட்டைப் படைஎடுத்தான். போரில் பராந்தகனின் மூத்த புதல்வன் இராஜாதித்யன் மாண்டு போயினன். இதன்பிறகு பராந்தகன் அதிக நாட்கள் வாழவில்லை. தக்கோலப் போருக்குப்பின் கிட்டத்தட்ட 25–30 ஆண்டுகள் சோழ வம்சத்தினர் தன் அதிகாரத்தைத் திரும்பிப்பெறபாடு படவேண்டியதாயிற்று.

பராந்தகன் காலத்தில் கோயில்கள் பெருகின. தில்லை நடராஜர் கோவிலின் விமானம் பொன் பூண்டது இவன் காலத்தில் என்பர் சரித்திர ஆராய்ச்சியாளர்.

கி. பி. 953 முதல் 985 வரை சோழ நாட்டை பராந்தகனின் வமிசத்தினரே ஆண்டனர். இமமூன்று பத்தாண்டுகளும் ஆராய்ச்சிக்குகந்தவை. கண்டராதித்ய ராஜகேசரி, அரிஞ்சயன்பரகேசரி, மதுரைகொண்ட ராஜகேசரிசுந்தரசோழன், பார்திவேந்திர கரிகாலன் பரகேசரி (இரண்டாம்) ஆதித்யன் எனும் சோழர்கள் கி. பி 949 முதல் கி. பி. 959 வரை ஆண்டனர். பெரிதோர் சாம்ராச்சியத்தை ஆளும்வாய்ப்பெய்யாவிடினும், பாண்டியர்களுடன் சுந்தரசோழன் போர் புரிந்ததாலேயே 'மதுரைகொண்ட' எனச் சிறப்புப் பெயர் அடைந்தார். சோழவரசு வலுவுற இவன் காலத்தில் நிகழ்ந்தது சேவூர் போராம். சேவூர் போர்களத்தில் சுந்தரச் சோழனின் புதல்வன் ஆதித்யன் சிறுவயதினனயிருந்தும் பங்குகொண்டான். வீரபாண்டியனின் தலையைக் கொய்தவன் எனப் புகழப்படுகிறன் இவ்விளம் பையன். சுந்தரசோழன் காலத்தில் சோழவரசு வளம் பெற்றிருந்தது. சுந்தரச்சோழன் நீதிவழுவா மன்னன் எனப் புகழ் பெற்றர். வீரசோழியத்தின் உரை இவர் காலத்தில் ஏற்பட்டதாகும். வடமொழி, தமிழ்மொழிப் புலவர் அரசரின் சலுகையைப்பெற்று வாழ்ந்தனர். சுந்தர சோழனின் வீரப்புதல்வன் இரண்டாம் ஆதித்யன், சூழ்சிகளில் சிக்கி கொல்லப்பட்டான். சுந்தர சோழனுக்குப் பின் உத்தமசோழன் பதவி ஏற்றர். இவருக்கு மதுராந்தகன் எனப்பெயரும் உண்டு. சோழர்காலத்துப் பழமை மிக்க நாணயமாக கருதப்படும் பொற்காசு உத்தம சோழர் காலத்தியது எனசரித்திரக்காரர்கள் அபிப்ராயப்படுகிறர்கள். நாணயத்தின் இரு புறங்களிலும், மையத்தில் உட்கார்ந்த ஓர்புலியும், அதன் எதிர் புறம் ஓர் மீனும், இரண்டிற்கும் நடுவில் ஓர் கோடும் உத்தமசோழனின் பெயர் கிரந்த எழுத்துக்களிலும்,

சுற்றுபுறத்தில் சிறுமணிகளும் பொறிக்கப்பட்டு காண்கிறது.

### இராஜராஜன்

மதுராந்தகன் பட்டம் பெறு முன்னரே, அருள் மொழிவர்மன் பதவிக்காக குடிஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன் சிற்றப்பன் மகனாகிய மதுராந்தகனின் அரசு அவாவைக் கண்டு, அவன் அவாதீருமளவும் தான் பட்டமேற்க மறுத்துவிட்டார், என திருவாலங்காட்டு செப்பேடுகள் கூறும். இவனுக்குப் பட்டபெயர் இராஜகேசரி இராஜஇராஜன். சேர, பாண்டிய மன்னர்களை வென்றதுமன்றி, கங்கம்பாடி (மைசூர் மாநிலத்தின் கீழ்பாகம் முழுவதும்) துளம்பம்பாடி, வேங்கை நாடு, குடகுநாடு இவைகளை தன்வயப்படுத்திக் கொண்டார். வேங்கைநாடு என்பது கோதாவரி, கிருஷ்ண ஜில்லாக்கள் கொண்டநாடு.

இதற்கு வடக்கேயுள்ள கலிங்கநாடும் சோழ ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டது. பிறகு இலங்கை நாட்டையும் ராஜராஜன் வென்றார். தஞ்சை பிரஹதீச்வரர் ஆலயம் இப்போது நாம்காணும் அளவில் உருவானது இவர் காலத்தே. இது ராஜராஜேச்வரம் என்றும், இவரது பட்டமகிஷியாகியத்ரைலோக்கியதேவியாரால் கட்டுவிக்கப்பட்ட "லோகமகாதேவீச்வரம்" எனும் திருவையாறு கோயிலும் அன்றும் இன்றும் புகழ்பெற்றவை. பெரும் புலவர்குழாம் இவரது காலத்தில் திகழ்ந்தது. எல்லாமதங்களையும் ஒரே நோக்கத்துடன் இவர் நடத்தியதுமன்றி, பௌளத்தர்களுக்கு பெரும் பொருளுதவியும், ஊக்கமுமளித்ததின் பேரில், நாகபட்டினத்தில் அக்காலத்தில் தழைத்தோங்கிய, பௌளத்த வீஹாரத்திற்கு 'இராஜஇராஜப்பெரும்பள்ளி' என பெயர் சூட்டினர். நாகப்பட்டினம் அக்காலத்தில் முதன்மைபெற்ற துறைமுகமாக விருந்ததுமின்றி சீனயாத்திகர்களும் வியாபாரிகளும் அடிக்கடி போக்குவரத்துக் கொண்ட இடமான

தால், சூடாமணி விஹாரத்தை அங்கு நிறுவ தகுதி எனக் கருதப்பட்டது அக்காலத்திய சீனர் 'இ-த்சிங்' தன் பிரயாணங்களை வர்ணிக்கும் ஓர் நூலில் நாகையைப் பற்றி சிறப்பாகக் கூறியுள்ளார், கிடாரம் முதலிய தீவுகளிலும் சோழக் கொடி உயர்ந்து நின்றது. இராஜாங்க அலுவல்களும் மிக்க சீறும் சிறப்புடனும் நடந்து வந்தன. பிற்காலத்திய சோழர்களில் முதன்மை ஸ்தானம் இவருக்கே உரித்ததாகும். ஆங்கில சரித்திரக்காரர் இவனை Raja Raja the Great, எனக் கூறுவதில் மிகை ஒன்று மில்லை. செப்பேடுகளில் சோழ சரித்திரம் துடர்ச்சியாக இக்காலத்திலிருந்தே எழுதப்பட்டது.

**முதல் ராஜேந்திரன்** கி. பி. 1012 – 1044.

தந்தையால் விட்டுப்போன ஓர் பெரும் இராஜ்யத்தை ஆளும் சீரிய பொறுப்பு பரகேசரி வர்மன் முதல் ரஜேந்திர சோழதேவருக்கு ஏற்பட்டது. தகப்பனுக்கு ஏற்ற தனயனாக அரசு புரிந்தார் ராஜேந்திரன். தென் கடற்தீவுகளில் எல்லாம் ஆதிக்கத்தை வலுவுறச் செய்தார். இதற்காக அவர் கப்பற்படையை சீர்படுத்தினார். சீனதேசத்துடனும், கிழக்கிந்திய தீவுகளுடனும் சோழ நாட்டார் வாணிப உறவு கொண்டு, சோழ நாட்டின் பொருளாதார நிலையை மிகவும் வளம்பெறச்செய்தனர். இவர் தன் வாழ்நாளிலேயே தனது மகன் ராஜாதிராஜனுக்கு இளவரசு பட்டஞ் சூட்டி தக்க பயிற்சியளித்தார். கங்கைகரை வரை படையை அழைத்துச்சென்று, கங்கையின் புனித நீரை சோழநாட்டிற்கு எடுத்துவந்த புகழ் இவரைச்சார்ந்ததாகும். இவர் கொப்பத்து போரில் கண்ட வெற்றி மிகவும் போற்றப்பட்டது. இவர் தன் காலத்தில் தஞ்சையினின்றும் கங்கபுரி எனும் ஊரை தலைநகராகக் கொண்டார்.

இராஜேந்திரனுக்குப் பின் தஞ்சைமாநகரம் சோழ ராஜ்யத்தைச் சேர்ந்திருந்ததைத் தவிர தலைநகராய் இருந்ததாகத் தெரியவில்லை.

பொதுவாக பிற்காலச் சோழர்கள் தம் காலத்தில் அறச்சாலைகளையும்,கோயில்களையும் பெரிதளவில் கட்டினார்கள். நாட்டின் வாணிபத்தில் கருத்துக்கொண்டு, துறைமுகங்களை சீர்பார்த்தனர். கப்பற்படையை பெருக்கினர். நாடுவளம்பெற சாசன வசதிகள், அணைகள் முதலியவைகளை இவர்கள் கருத்துடன் அமைத்தனர். திருமுறைகள், பெரிய புராணம், வீரசோழியம், ஜயங்கொண்டார்பாணி நன்னூல், திருவிசைப்பா, சிவஞான போதமும் இவர்கள் காலத்திய தென்றால், சோழர்கள் புலவர்களை எப்படி ஆதரித்திருப்பார் என்பது விளக்க வேண்டியதில்லை.

சோழவமிசம் அதிகார குன்றத்துவக்குங்கால், ஆந்திரபிரதேசத்தை ஆண்ட தெலுங்கு மன்னர்கள், சோழ நாட்டின் வட எல்லைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக பிடித்து கொண்டு நாளாவட்டத்தில் சோழ தேசத்தின் முடியைத்தான் ஏற்றனர்.

சோழ சாம்ராஜ்யம் சீர்குலைந்து கொண்டிருந்த சமயம், விஜயநகரசாம்ராஜ்யம் ஓர் மகோன்னத ஸ்திதியையடைந்தது. இன்றும் இந்திய கலாச்சாரம், தென்னிந்தியாவில் பழம் தொன்மைமிக்கக் காக்கப்பட்டு வருகிறதென்றால் அதன் முக்கியமான காரணம், விஜய நகர சாம்ராஜியம்தான். வடநாட்டில் சோமநாதர் ஆலயத்திற்கும், காசிவிஸ்வரேர் ஆலயத்திற்கும் நேர்ந்த இன்னல் இங்கே பரவாமல் தடுக்கப்பட்டதற்கு விஜய நகர அரசர்களுடைய பெரும் ஈடுபாடுதான் எனச் சொல்லாம்.

கி. பி. 1358-ல் விஜய நகரத்தரசர்களின் தூண்டுதலால் குமார கம்பண்ண தென்னாட்டைபடை எடுத்து பலவிடங்களை ஜயித்து, விஜய நகர சாம்ராஜ்யத்துடன் இணைத்துக் கொண்டான். கி. பி. 14-ம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் விஜய நகர ஆட்சியின்கீழ் கப்பம்

கட்டும் சிற்றரசர்கள் குழாமே தெனனாட்டில் பரவி இருந்தது.

கிருஷ்ணதேவராயர் பட்டம் ஏற்ற பின்பே. தேற்கேயுள்ள சிற்றரசுக்களைப் பற்றி திட்டம் வகுக்க அவகாசம் ஆந்திர மன்னர்களுக்குக் கிட்டியது. அதுகாறும் முகமதிய படைகளைத் துறத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டி இருந்தது சோழ சிற்றரசன், பாண்டியனை வென்று மதுரையை கைப்பற்றவே, விஜயநகர மன்னன், பாண்டியனின் வேண்டுகோளுக்கிணங்கி தன் தளவாயான நாகம்ம நாயக்கரைப் பெரும்படையுடன் அனுப்பி வைத்தான். பாண்டிய நாட்டை சோழர்களிடமிருந்து திரும்பவும் கைகொண்டான் நாகம்ம நாயக்கன். இதே சமயம் தொண்டை மண்டலமும் அதை யொட்டிய சிற்றரசுக்களும் வீர நரசிங்கராய நாயக்கர் என்னும் சேனைத் தளகர்த்தரிடம் ஒப்படைக்கப்பட்டன. சில நாட்களுக்குப்பின் வீர நரசிங்க நாயக்கர், விஜய நகர அரசர்களின் ஆதிக்கத்தை மறுக்க முயன்றதின் பேரில், கிருஷ்ண தேவராயருக்குப் பின் பட்டத்திற்கு வந்த அச்சுதப்ப நாயக்கர் தஞ்சையையும், மதுரையையும் தனது ஆட்சிக்குள்ளாக்கியது மின்றி, ஆட்சியை நிலைநிறுத்த வேண்டி சேவப்ப நாயக்கர் எனும் பிரதிநிதியை தஞ்சையிலிருந்து அரசாங்க காரியத்தை கவனிக்க ஏற்பாடு செய்தார். ஆகவே தஞ்சை, விஜயநகர மன்னரின் பிரதி நிதிகளால் ஆளப்படத் துவங்கிய காலம் சுமார் கி. பி. 1532 ஆகும்.

தஞ்சை நாயக்க வமிசத்தனிரால் ஏறக் குறைய 150 ஆண்டுகள் ஆளப்பட்டது.

**சேவப்ப நாயக்கர்** கி. பி. 1532–1580.

சேவப்ப நாயக்கர் தஞ்சையை ஆண்ட நாட்களில், தான், விஜய நகரத்தரசகளாகிய, அச்சுத ராயர், சதா

சிவ ராயர் இருவர்களுடைய பிரதிநிதி என்ற முறையிலேயே ஆண்டு வந்தார். அவர்காலத்தில் தஞ்சை சிறப்புற்று இருந்தது. அவருடைய மந்திரியாகிய கோவிந்த தீக்ஷிதர் ஓர் திறமை வாய்ந்த இராஜதந்திரி. பெரும் புலமையும் அவருக்கு வடமொழியில் இருந்தது,

சேவப்ப நாயக்கர், சிவகெங்கை குளத்தினின்றும் தண்ணீர் வசதிகள் அதிகப்படுத்த, ஓர் பெரும் ஏரியை வெட்டி வைத்தார். தஞ்சையின் மேற்கே அவ்வேரியின் பகுதியை இப்போதும் காணலாம். இவ்வேரி சேவப்ப நாயக்கன் ஏரி என அழைக்கப்படுகிறது. பல கோயில்கள் திருப்பணி செய்தும், நீர்ப்பாசன வசதிகளை சீர்திருத்தி அமைத்தும், புலவர்களைப் போற்றி அவர்களுக்கு மான்யங்கள் வழங்கினர் என ராஜகோபால விலாசம் என்ற நூலும், விஜய விலாசம் எனும் நூலும் அவரைப் புகழ்கின்றன. புகழ்பெற்ற மத்வமத ஆசாரியார் விஜயேந்திரதீர்த்தர் இவரால் மிகவும் ஆதரிக்கப்பட்டார். இக்காலங்களில். போர்த்துகீசியர்கள் தஞ்சைக்கு அதிகமாக வரலாயினர். கடற்கரைப் பட்டினங்களில் அவர்கள் வாணிபம் செழிக்கலாயிற்று. சேவப்பர் போர்ச்சுகீசியருக்கு உதவினர். அவர்கள் கிடங்கு கட்டிக்கொள்ளவும். மாதாகோவில்கள் நிறுவ உதவவும் உத்திரவு கொடுத்ததுமன்னியில் மதஸ்தாபனம் செய்வதையும் ஏற்றுக் கொண்டார்.

**அச்சுதப்ப நாயக்கர் கி. பி. 1560-1614.**

சேவப்ப நாயக்கரின் புதல்வனை அச்சுதப்ப நாயக்கர் கி. பி. 1580-ல ஏற்றார். கோவிந்த தீக்ஷிதர் எனும் ராஜதந்திரி சேவப்ப நாயக்கரால், மந்திரி போன்று பாவிக்கப்பட்டு வந்த போதிலும், அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் தான் அவர் மந்திரி பதவியை ஏற்றார். அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் அவர் போர்களிலும், உள் நாட்டுக் கலகங்களை அடக்குவதிலும் ஈடு

படவேண்டி இருந்தது. தன் தந்தையைப் போன்று இவரும், விஜய நகரத்தார்களாகிய, சதாசிவராயர், திருமலை ராயர், ஸ்ரீ ரங்கர், வெங்கிடபதி ராயர் இவர்களுடைய ராஜப் பிரதிநிதி என்ற முறையில் அவர்கள் உத்தரவிற்குக் கீழ்பணிந்தே நடந்து வந்தார் மதுரை செஞ்சி அரசர்கள் ஒன்று கூடி, விஜயநகர ராஜ்யத்தின் ஆதிக்கத்தை அகற்ற முயன்றபோது அச்சுதரின் எஜமான் விசுவாசமென்றே, விஜயநகரத்தின் கவுரவத்தைக் காப்பாற்றியது. இதுவன்றி, தென்னாட்டில் விஜயநகர துடர்பே துண்டித்துப் போயிருக்கும். தவிரவும் தல்லிக்கோட்டையில் கி. பி. 1565-ம் ஆண்டு நிகழ்ந்த போரில் விஜயநகர் ராஜ்யம் வலுவிழக்கத் துடங்கியபோது, வடக்கில் வேங்கிடபதி ராயரும், தெற்கில் அச்சுதப்பரும் அதை நிலைநாட்டினர். தெற்கே, தஞ்சை நாயக்கர்களைத் தவிர மற்றைய சிற்றரசுகள் தருணம்பார்த்து கலகம் செய்யவாரம்பித்தனர். வெங்கிடபதிராயரின் மறைவிற்குப் பின் விஜயநகர சிங்காதனத்திற்காக பலத்த சச்சரவுகள் ஏற்படவே, அச்சுதப்ப நாயக்கர், தன் புதல்வன் கையில் தஞ்சையை ஒப்படைத்துவிட்டு விஜயநகரம் சென்றார்.

**ரகுநாத நாயக்கர்** கி. பி. 1600 - 1634.

தந்தை இருக்கும்போதே இவர் பட்டம் ஏறினர். தஞ்சை நாயக்க வமிச சரித்திரத்தில் இவர் அழியாப் புகழுடன் விளங்குகிறார். கலை கல்விகளில் ஆர்வம் பெற்றதன்னியில் சுதாவாகவே பெரும் புலமை படைத்திருந்தார். அபிநவ போஜன் என்ற பெயரிட்டு அக்காலத்திய புலவர்கள் இவரை வாழ்த்தினர். பல நூல்களிலும் இவ்வரசரைப புகழ்ந்து பாடினர்கள்.

இவர் காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடயையில் கடலில் ஓர் பாலம் கட்டினதாக தெரிகிறது.

இவர் காலத்தில்தான் முதல் முதலாக டென்மார்க் நக ரத்தினராகிய டேனிர்கள் தரங்கம்பாடியில் ஓர் சிறு கிடங்குகட்டிக்கொள்ளவும், வியாபாரம்செய்யவும் அனு மதிக்கப்பட்டார்கள். ஆங்கிலேயரும், டச்சுக்காரர்களும் ரகுநாத நாயக்கரின் தஞ்சை இராஜ்யத்தில், வியாபா ரம் புரிய போட்டி இட்டனர்.

ரகுநாத நாயக்காப்யுதயமு என்னும் நூலில் ரகு நாத நாயக்கறைப்பற்றி வில்தாரமாக கூறப்பட்டுள் ளது. அவர் பாரிஜாதாபஹரணம் எனும் காவியத்தை இரண்டே ஜாம நேரத்தில் செய்து முடித்ததாகத் தெரி கிறது. வடமொழியிலும். தெலுங்கிலும் இவர் இயற்றிய நூல்கள் பல. சங்கீதக்கலையில் பெரும்திறன் பெற்றது மின்றி அதுவரை சங்கீத உலகத்தில் பழக்கப் பெருத சிலராகங்களை அவர்கண்டுபிடித்தார் எனத்தெரிகிறது. சங்கீத சுதா எனும் நூல் அவரும் அவருடைய அமைச் சர் கோவிந்த தீக்ஷிதர் இருவருடைய அரும் முயற்சியி னல் இயற்றப்பட்டதென தெரிய வருகிறது. ரகுநாதன் காலத்தில் தஞ்சை, 'நாமகளின் திருக்கோயில் தானே' என ஐயுறும்படி இருந்த தென்றும் ராமபத்திராம்பாள் எனும் ராணி தன் நூற்களில் கூறுகிறுள். கோவிந்த தீக்ஷிதர், யஞநாராரண தீக்ஷிதர், வேங்கிடமகி, ராஜ சூடாமணி தீக்ஷிதர், பாஸ்கர தீக்ஷதர், குமாரதாத்தா சாரியார், ராமபத்திராம்பா, மதுரவாணி எனும் புலவர் கள் சிலர் முக்கியமாய் குறிப்பிடத் தக்கவர்கள். சங்கீத சுதா, ஸாஹித்ய ரத்னகரம், விஜய விலாசம், ரகுநா தாப்யுதயமு, முதலியவை அக்காலத்திய பிரசித்திப் பெற்ற நூல்களாகும். ரகுநாதர் தன் சிறு பிராயத் திலேயே இயற்றிய நூல் பாரிஜாதாபஹரணம். தவிர வும், வால்மீகி சரித்திரம், ருக்மணி பரிணயம், யக்ஷ கானம், ராமாயணம், இவற்றை தெலுங்கிலும், சங்கீத சுதா, பரத சுதா என்பன சம்ஸ்கிருதத்திலும் இவரால் இயற்றப்பட்டவையாகத் தெரிகிறது.

## கோவிந்த தீக்ஷிதர்

இம் மகான் அச்சுதர், ரகுநாதர், விஜயராகவர் இவர்கள் மூவர்காலத்திலும், அமைச்சராக இருந்து உதவினர். கும்பகோணம், அய்யம்பேட்டை, தஞ்சை முதலிய ஊர்களில் இம்மகானின் பெயரால், குளம், தெருவு சிறு சிற்றூர்கள் முதலியவைகள் இருந்து வருவதால் அக்காலத்தில் ஜனங்களின் மதிப்பை இவர் எவ்வளவு பெற்றிருந்தார் என்பது நன்கு புலப்படுகிறது. அச்சுதப்பரால் தஞ்சையின் அரசு பதவி அவருக்கு அளிக்கப்பட்டதாகவும், அதை அவர் தான் ஏற்கமறுத்ததாகவும், சேவப்ப நாயக்கரை இவருடைய சிபார்சின் பேரிலேயே அச்சுத ராயர் தஞ்சைக்கு அனுப்பிவித்த தாகவும் தெரியவருகிறது. அவரது சோதிட சாஸ்திர அறிவு மிகவும் போற்றத் தக்கது. கோவிந்த தீக்ஷிதர் தன் காலத்தில், வேத பாடசாலைகளையும், சாஸ்திர பயிற்சிக் கூடங்களையும் ஏராளமாக நிறுவி, ஊக்குவித்து வந்தார், அவர் கன்னட அந்தணக் குலத்தோராயினும், தமிழ் மொழிக்கு அவர் மதிப்பு போற்றத் தக்கது. திருவையாறு மகாத்மியம் அவர் காலத்தில் தான் மொழி பெயர்க்கப்பட்டது. (கி. பி. 1605) தாண்டவமாலை எனும் தமிழ் சோதிட நூல் முடிவுரையில் நூலாசிரியர் கோவிந்தீட்சதனின் வழியே இந்நூல் எழுதப்பட்டது என்கிறார். இவருடைய அரும்பெரும் சேவையைக்கருதியே, கும்பகோணத்திற்கருகேயுள்ள பட்டீச்வரம் ஆலயத்தில், தீட்சதர் தம்பதிகள் சிலைகள் அழகாக அமைத்து இன்றும் பூஜிக்கப்பட்டு வருகின்றன.

## விஜயராகவநாயக்கர்

**அச்சுதவிஜயராகவநாயக்கர்** கி. பி 163?—1673 மன்னருதாசன் எனப்பெயர்கொண்ட விஜயராகவநாயக்கர், தன் தந்தையாகிய ரகுநாதநாயக்கருக்குப்பின் பட்டத்திற்கு வந்தார். இவருடைய காலத்தில், விஜயநகர

ராஜ்ஜயத்தில் கலகங்களும், போர்களும் ஏற்பட்டன. பீஜப்பூர்,கோல்கொண்டா சுல்தான்கள் விஜயநகரத்தைத் தாக்கினர். இதேசமயம் செஞ்சிநாயக்கரும், மதுரைநாயக்கரும், விஜயநகர அரசரின் ஆதிக்கத்தினின்றும் விடுவித்துக்கொள்ள முற்பட்டனர். முகம்மதியர்கள் பெரும் குதிரைப்படையுடன் செஞ்சியைக்கைப் பற்றிக்கொண்டனர், தஞ்சையையும் தாக்கினர் விஜயராகவநாயக்கர் மிக்க சாமர்த்தியாக முகமதியர்களை எதிர்க்காமல் அவர்களுக்கும் பெரும் தொகைகள் கொடுத்து தன்பதவியைத் திரும்பப்பெற்றார். சற்றேறக்குறைய கி. பி. 1646-ம் ஆண்டில் இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. கி. பி. 1653-ல் இரண்டாம்முறை பீஜப்பூர் சுல்தான்கள் படை எடுத்து மூன்றும் ஸ்ரீரங்கநாயகரை வென்றபோது விஜயநகரசாம்ராஜ்யத்துடன், தஞ்சை நாயக்க ராஜ்ஜியத்திற்கும் இன்னல்கள்மேலும்மேலும் வரத்துடங்கின. தஞ்சை பீஜப்பூர் சுல்தானின் ஆதிக்கத்தை ஏற்கவேண்டியதாயிற்று. செஞ்சி, மதுரை, தஞ்சை நாயக்க வமிசத்தரசர்களுள் ஒற்றுமை அற்று, சச்சரவுகள் தழைக்கலாயின. முகமதியர்கள் மறுபடியும் தஞ்சையைக் கைப்பற்றினர். விஜயராகவன் நாட்டைத்துறந்து, வெளியேறினன். ஆனல் சிறிது காலத்திற்குள், பெரும் பஞ்சமும், தொத்துநோய்களும் பரவவே, முகமதிய தளகர்த்தர்களும், சேனைத்தலைவர்களும் ஒருவருக்கொருவர் அதிருப்தியினல், தாய்நாடுத் திரும்பப் பிடிவாதம் பிடித்தனர். ஆகவே முகம்மதியர்கள் தஞ்சையைவிட்டு அகன்றவுடன் விஜயராகவன் திரும்பவும் தஞ்சையில் வந்தமர்ந்தான். மதுரையை ஆண்டுவந்த சொக்கநாதன் தஞ்சை நாயக்கருடன் போர்புரிய நேரிட்டு கி. பி. 1660—61-ல் தஞ்சை,மதுரை நாயக்கர் வசமாகி அன்னருக்கு கப்பம் செலுத்திவர நேர்ந்தது. பின்னர் தஞ்சையை மீட்க கி. பி. 1673-ம் ஆண்டில் நிகழ்ந்த போரில் விஜயராகவநாயக்கர் சமர்களத்தில் வீர சொர்க்கம் அடைந்தார். இப்போரின் போது விஜயராகவரால் சிறைப்பட்டிருந்த அவர்மகன்

மன்னருதாஸ், விடுதலைபெற்று போரில் கலந்துகொண்டான். டேலர் எனும் ஆங்கில சரித்திரக்காரர் விஜயராகவரின் போர்த்திறனையும், தீரத்தையும் மிகவும் மெச்சினர். இந்தப்போரில் மன்னருதாஸனும் உயிர்நீத்துவிடவே, தஞ்சை நாயக்கர் வமிசம் முற்றுப்பெற்றது.

விஜயராகவநாயக்கர் நன்கு கல்வி பயின்றவர். அவர் காலத்தில் தஞ்சையில், குமாரதாத்தாசாரியர் எனும் வடமொழி புலவரும், ரங்கஜம்மா எனும் ஓர் கவிஞையும் இருந்தார்கள். மற்றும் மன்னருதாஸ் சுயமாகவே ஒரு பெரும் கவியாகவிருந்தார். அவர் இயற்றிய நூல்கள் தஞ்சை ஸரஸ்வதி மகாலில் இன்றும் பார்க்கலாம். சோமயாஜி, செங்கல்வகாளாகவி, க்ஷேத்ரஞர் என்ற பிரிசித்தியுற்ற தெலுங்கு கவிஞர் விஜயராகவனுடைய அவையில் போற்றப்பட்டு ஆஸ்தானத்தில் கௌரவம் அடைந்திருந்தனர். சதுர்தண்டிப்ரகாசிகை என்ற சங்கீத நூல் எழுதப்பட்டகாலமும் இதுவே. இந்நூலாசிரியர் வேங்கடமகி, கோவிந்ததீக்ஷிதரின் புதல்வர் ஆவர்.

**செங்கமலதாஸ்** கி. பி. 1674—75

தஞ்சை மதுரை சொக்கநாதநாயக்கரின் ஆளுகையின்கீழ் வந்தபோது, அவர் தன் மாற்றாந்தாயின் மகனை அளகிரிநாயக்கரை தஞ்சையைஆள நியமித்தார். அளகிரி சிலநாட்களில், ராயஸம் வெங்கண்ணா என்பவரின் தூண்டுதலால், சொக்கநாதநாயகருக்குப் பணிய மறுத்து விட்டான், இதேசமயத்தில், தஞ்சை நாயக்க வம்சத்துபாலகன்ஒருவன் நாகையில் காப்பாற்றப்பட்டு வளர்ந்து வந்ததாக தெரிந்து, ராயஸம் வெங்கண்ணா, செங்கமலதாஸை பயன்படுத்தி, அவனைத் தஞ்சையில் முடிசூட்ட, பீஜப்பூர் சுல்தானின்உதவியைக்கோறினன். சுல்தான் ஏகோஜி எனும் சேனபதியை பெரும்படையுடன் தஞ்சைக்கு அனுப்பினன். இதைக்கேள்வியுற்ற அளகிரி, மதுரை சொக்கநாதனின் உதவியை

நாடினன், ஆனல் சொக்கநாதன் அளகிரியின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்கவில்லை.

அய்யம்பேட்டை அருகே நடந்தபோரில் ஏகோஜி வெற்றியுற, அளகிரி உயிருக்கஞ்சி, மைசூர் இராஜ்யத்திற்கு ஓடிவிட்டான். ஏகோஜி செங்கமலதாஸை தஞ்சையின் அரசபதவியில் ஸ்தாபித்துவிட்டு கும்பகோணத்தில் தங்கினன். கி பி. 1674 முதல் செங்கமலதாஸின் ஆளுகை தஞ்சையில் துவங்கிற்று. செங்கமலதாஸ் தனக்கு ஆதரவளித்த நாகை வியாபாரி செட்டியாரை தளவாயாகவும், மந்திரியாகவும் அமைத்துக் கொண்டான். பதவி மோகங்கொண்ட ராயசம் வெங்கண்ண பீஜப்பூருக்குத் திரும்பும் தருவாயிலிருந்து ஏகோஜியை பலவகையிலும் தஞ்சை அரசைக்கைப்பற்றுமாறு தூண்டினன். கி. பி 1675-ம் ஆண்டில், ஏகோஜி தஞ்சைமீது படையெடுக்க செங்கமலதாஸ் அரியலூர் என்னும் இடத்திற்குத்தப்பியோடினன். இப்படியாக தஞ்சை நாயக்க வம்சம் முடிவிற்குவந்து மராத்திய வமிசத்து மன்னர்கள் தஞ்சையை ஆளத் தொடங்கினர்.

நாயக்கவரசர் காலத்தில் தஞ்சைக்கு அயல்நாட்டார் போக்குவரத்து அதிகரித்து, வாணிபமும் வளர்ச்சியுற்றது. நீர்பாசன வசதிகள் சோழர்கள் காலந்தொட்டு நன்கு முன்னேற்றமடைந்திருப்பினும், பலஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள் இவர்கள் காலத்தில் அமையப்பெற்றன. அச்சுதப்பநாயக்கர் காவிரியின் குறுக்கே ஓர் அணை ஏற்படுத்தினரெனத்தெரிகிறது, தவிறவும் கோட்டை, மதில் சுவர்கள் இவைகளை வலுவு படுத்துவதிலும், பழுதுபார்ப்பதிலும் இவர்கள் அதிகமாய் ஈடுபட்டார்கள். தற்போது நாம் காணும் அரண்மனை, மாடமாளிகை ஆவனமெல்லாம் நாயக்கர் காலத்தில் ஏற்பட்டவை.

பல்கலைகள் மகோன்னதஸ்திதியையடைந்து, நாயக்கர் காலத்தில் சங்கீதம் முன்னணியில் துலங்கிற்று. ரகுநாதநாயக்கர் '**சங்கீத சுதாநிதி**' எனும் நூலை இயற்றினர்.

---


**ஏகோஜி எனும் வெங்கோஜி** கி. பி. 1676—1683.

புதிய சூழ்நிலையில் புதிதாக அரசு உரிமை பெற்ற ஏகோஜிக்கு பலவிதமான சந்தர்ப்பங்களை சமாளிக்க வேண்டி இருந்தது. முகலாயர்கள் தஞ்சையின்பேரில் கண்வைத்தவாறிருந்தனர். பிரசித்திப்பெற்ற ராணி மங்கம்மாள் முதலில் இவருக்கு எதிரியாக விருந்து வந்தாள். தஞ்சை அரசு உரிமையை யடைந்தால், பெங்களூர் ஜாகீரை அவர் சிக்க தேவராயரிடம் விற்றுவிட வேண்டி இருந்தது. தவிரவும் தன் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொள்ள தருணம் எதிர்பார்த்திருந்த, டச்சு, ஆங்கிலேய, போர்த்துகீசிய வர்த்தகர்களிடம் மிகவும் சாமர்த்தியமாக நடந்து தானடைந்த பெரும்பதவியிலிருந்து ஆளவேண்டி இருந்தது. தன் பந்துவான ராமராஜா முகலாயர்களால் தாக்கப்பட்டபோது ஏகோஜி பெரும் சைன்யத்தை திரட்டி அனுப்பி அவரை பாதுகாத்ததாகத் தெரியவருகிறது. போரில் திறன்பெற்று போர்வீரனாக மட்டும் வாழவில்லை ஏகோஜி. ராஜ்ய நிர்வாகத்திலும் மிக்க திறமை பெற்றிருந்தார். நீர்ப்பாசனத் திட்டங்களையும் கால்வாய்கள் வெட்டியதாகவும் தெரியவருகிறது. தவிரவும் தரிசாகக் கிடந்த பெரும் நிலபாகம் வளமுடைய வயலாக இவர் காலத்தில் மாறினவென்று சரித்திரம் கூறும்.

கி. பி. 1676—77-ல் சத்திரபதி சிவாஜி மகாராஜா, ஏகோஜியைப் போருக்கழைத்தார். பிதுரார்ஜிதமான ஜாகீரைப் பற்றிய சச்சரவுதான் இதற்குக் காரணமாகியது. ஏகோஜியின் மந்திரியாகவிருந்த ரெகுநாத பண்டிதர், சத்ரபதி சிவஜியிடம் வேலைக்குப்

போனர். இப்படையெடுப்பிற்கு தூண்டுகோலானவர் இவர் எனச்சரித்திர ஆசிரியர்கள் சொல்வர். ஆயினும் பல காரணங்களால் சிவாஜி கர்நாடகத்தில் அதிக நாட்கள் தங்க இயலவில்லை. ஆதலால் இப்படை எழுச்சியினல் பயன் ஒன்றும் எழவில்லை சிவாஜி, செஞ்சியையும், வேலூர் கோட்டையையும் கைப்பற்றினர். தான் திருப்பிச் செல்லுகையில் செஞ்சி, கொள்ளிடத்து அருகாமையில் உள்ள பிராந்தியங்களில் சந்தாஜி என்பவரை சுபேதாராக நியமித்தார். ஏகோஜி இதைக் கைப்பற்ற முயன்று பலனடைய வில்லை. மதுரை நாயக்கர் சொக்கநாதர், சந்தாஜிக்கே உதவி புரிந்தார். கி. பி. 1678 — 80 ஆண்டுகளில் சொக்கநாதனை ஒரு மொகலாய தளகர்த்தன் வென்று மதுரையை தன் வசமாக்கிக் கொண்டான். பெரும் பிரயாசையுடன் சொக்கநாதன் மதுரையைத் திரும்பிப் பெற்றான். அதேசமயம் மைசூரிலிருந்து ஓர் படை சொக்கநாதரைத் தாக்கிற்று. ஏகோஜி சொக்கநாதருக்கு உதவிபுரிந்து, மைசூர் படையை முறியடிக்க வைத்தார். காமகலாநிதி எனும் ஓர் தெலுங்கு நூல் இச்சம்பவத்தை வர்ணித்து ஏகோஜி எனும் வெங்கோஜியைப் புகழ்கிறது. புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு உதவிபுரிந்து, பாம்பருக்கும் புதுக்கோட்டைக்கும் இடையிலுள்ள பிரதேசத்தை தஞ்சையுடன் இணைத்துக்கொண்டார் ஏகோஜி.

வளமும், சீரும், சிறப்பும் மிகுந்த தஞ்சையைகண்ட பிறகு, மாபெரும் மாராத்திய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதைவிட, இவ்வளமிகு நாட்டை, பரிபாபாலித்து வந்தாலே போதும் என்ற நோக்கமே எகோஜிக்கு இருந்தது. அவன் தமையனை சத்திரபதிசிவாஜி தஞ்சையை தன் நாட்டுடன் இணைக்க முயன்ற போது, அத்திட்டத்தை அறவே மறுத்ததுமின்றி, சிவாஜிக்குக் கப்பம் கொடுக்க ஏற்று, தஞ்சையை முன்னேற்ற மடையச் செய்வதிலேயே ஊக்கம் கொண்டான்.



ஏகோஜி (1676-1683) ஷாஜி (1684-1712) சரபோஜி (1712-1728)

நாயக்கமன்னர்களால் வளர்க்கப்பட்ட அருபெரும் இலக்கிய சாத்திர நூல்களை பாதுகாத்து மேலும் அவர்கள் ஆதரித்தது போலவே, மராத்திய ராஜ்யத்தின் வேர் நன்று ஊன்ற வைத்து பெரும்புகழுடன் கி. பி. 1684-ல் இவ்வுடலை நீத்தார்.

**இரண்டாம் ஷஹாஜி 1684**

"தர்மா கூதம்" என்ற வடமொழி நூல் ஷஹாஜியின் காலத்தில் எழுதப்பட்டது. இந்நூல் த்ரயம்பக ராயமகி எனும் புலவரால் இயற்றப்பட்டது. இதில் தன் புதல்வனுக்காக வேண்டி ஏகோஜி அரசு பதவியை விட்டு விலகினதாகக் கண்டுள்ளது. "சாஹேந்திர விலாசம்" என்ற நூல்புகழ்பெற்ற ஸ்ரீதர வெங்கடேசர் (அய்யாவாள்)என்பவரால் ஷஹாஜி காலத்தில் இயற்றப்பட்டுள்ளது. அந்நூலும் இதே விஷயத்தை கூறுகின்றது.

ஏகோஜி மகாராஜாவிற்கு, ஷஹாஜீ, சரபோஜீ துக்கோஜீ என்ற மூன்று புதல்வர்களிருந்தனர். தக்க வயதடைந்த உடன் ஏகோஜி இம்மூவர்களையும் தனித் தனியே, இராஜ்யங்களின் சிற்சில பகுதிகளை கொடுத்து ஆளவைத்தார். மூத்த புதல்வன ஷஹாஜீ தஞ்சையிலேயே இருக்க, சரபோஜீ சாக்கோட்டையிலும், துக்கோஜீ மஹாதேவிபட்டணம் எனும் ஊர்களிலும் அரசு செலுத்தி வந்தனர். ஷஹாஜியின் காலத்தில் தஞ்சை கோட்டை பழுதுபார்க்கப்பட்டு சீர்திருத்தமடைந்தது. ஏழைகளை பராமரிக்க சத்திரங்களும், இலவச மருத்துவ சாலைகளும் இவர் காலத்தில் அதிகரிக்கப்பட்டன. தமிழகத்தில் அராபிய தேசத்தில்

புகழ் வாய்ந்த வைத்தியர்கள் பலரை இவர் முதல்தடவையாக வரவழைத்து ஆதரவளித்தார். வழக்கு விசாரணைக்காக நியாயஸ்தலங்களை இவர் அமைத்தார் எனத் தெரிகிறது. இவர் காலத்தில் சைன்யத்தின் பராமரிப்பும், எண்ணிக்கையும் அதிகரித்ததாகத் தெரிகிறது.

எல்லாத்துறைகளிலும் தஞ்சை இக்காலத்தில், செழிப்பும், முன்னேற்றமும் பெற்று விளங்கியது. இலக்கியங்கள், இலக்கணங்கள் இதர நூல்கள் எல்லாம், வடமொழி, தமிழ், தெலுங்கு, மராத்தி இப்பாஷைகளில் பெரிதும் இயற்றப்பட்டன. ஷஹாஜியே ஓர் அரும் புலவர், பதினெட்டாம் நூற்றாண்டின் "போஜன்' என சிறப்புப் பெயர் இவருக்கு சூடப்பட்டது.

தஞ்சை மராத்திய மன்னர்களுள் எவர் காலத்திலும் கல்வித் துறையில் வளர்ச்சியும், புதுப்புது நூல்களின் ஆக்கமும் இக்காலத்திற்போல் சிறந்து இருக்கவில்லை எனக்கூறலாம்.

**தமிழ்**

பூலோக தேவேந்திர விலாசம், அதிரூபவதி கல்யாணம், சந்திரிகாஹாஸ விலாச நாடகம், விஷ்ணு சாஹராஜ விலாசம் ஆகிய குறவஞ்சி கூத்துகள், சஹாஜி அரசனைப் பற்றியவைகள் எனத் தெரிய வருகின்றன. அருணசல கவிராயர், வேதாரண்யம் தாயுமானவர், வைத்தியநாத தேசிகர், ஸ்வாமிநாத தேசிகர், திருவாடுதுறை சிவஞான ஸ்வாமிகள் இவர்கள் அனைவரும் இக்காலத்தியவர்கள்.

த்ரயம்பக ராயருல் எழுதப்பட்ட தர்மா கூதம் ஓர் உயர்ந்த நூல். த்ரிபுர விஜய சம்பு எனும் நூல், நரசிம்ம மகி என்பவரால் இயற்றப்பட்டது. ஆநந்தராய மகியினுல் எழுதப்பட்ட, ஆசார நவநீதம், த்ரயம்பகரின் ஸ்த்ரீ தர்மம், பாகவந்தராயருடைய, ராகவாப்யுதயம், முகுந்த விலாசம், வெங்கிடகிருஷ்ண தீக்ஷிதரால் இயற்றப்பட்ட நடேச விஜயம், ஸ்ரீ ராம சந்திரோதய காவ்யம், குசலவ விஜய நாடகம் இக்காலத்தில் இயற்றப்பட்டவை.

1693-ம் ஆண்டில் திருவிசலூர் கிராமத்தை ஷஹாஜி புலவர்களுக்காக மான்யமாக வழங்கி, அதற்கு ஷஹாஜி ராஜபுரம் எனப் புதுப்பெயரிட்டார்.

இங்கு வாசம் செய்து ஷஹாஜியினுல் ஆதரிக்கப் படடவர்களுள், அப்பா தீக்ஷிதர் என்பவரால் கௌரீ மாயூரம், மதன பூஷணம் எனும் நாலும், 'நவீன பதஞ்சலி', எனும் பெரும் புகழ்பெற்ற ராமபத்திரர் என்பவரின் ஜானகீ பரிணயம், ச்ருங்கார திலகம், சில விருத்தியின் டீகைகள், சத்தர்சன சித்தாந்தம் முதலியவைகள் குறிப்பிடத் தக்கவை. கும்பகோணத்தையடுத்த கன்றமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த இவர் வடமொழி நூல்களில் தேற்சியுற்று, பெரும் புலவர்க்கோளுக அக்காலத்தில் திகழ்ந்தவர். சித்தாந்த சித்தாஞ்ஜனம் எனும் வேதாந்த நூலை தொகுத்த பாஸ்கர தீக்ஷிதர், வித்யாபரிணயம், ஜீவானந்தம், இவைகளை ஆக்கியோரான வேதகவி, சுகசந்தேசம், அத்புததர்பணம் ஆகிய நாடகங்களின் ஆசிரியர் மஹாதேவ கவி,

ஸ்ரீதர அய்யாவாள், ச்ருங்கார மஞ்சரி எனும் நூலின் ஆசிரியர் பெரியப்பாகவி, நல்லகவி, அப்பையா தீக்ஷிதர் இவர்கள் எல்லோரும் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள்.

தெலுங்கு மொழியிலும் இவர் காலத்தில் பல நூல்கள் உருவாகின. திருவாரூர் தியாகராஜ சுவாமிகளின் பேரில் இவர் பாடிய பாட்டுகள் இப்போதும் சரஸ்வதி மகாலில் காணக்கிடைக்கின்றன. இவர் ஓர் பெரும் இசை வல்லுனர். ஆதலால், சங்கீத விஷயமான நூல்களும், ஆராய்ச்சிகளும் இவர்காலத்தில் தோன்றின.

மராத்திமொழியில் ஷஹாஜி ராஜரால் இயற்றப்பட்ட பல நூல்கள் உள. தவிரவும் அவர்கள் காலத்தில் மராத்தியமொழியில் நூலாக்கியோர் பலர். ஹிந்தி மொழியிலும் சில நூல்கள் இவர் காலத்தில் தஞ்சையில் இயற்றப்பட்டன.

இவர் காலத்தில் தஞ்சை பொற்காலத்தைக் கண்டது எனலாம். குடிஜனங்கள் மிகவும் சந்தோஷத்துடன் வாழ்ந்தனர் என்று ஆங்கிலேயர்கள் எழுதி வைத்த வரலாறுகளில் கண்டுள்ளன.

தன் இறுதி காலத்தில் ஷஹாஜி யோகவழியில் ஈடுபட்டு, வேதாந்த வழியைப் பின்பற்றினர். பரப்ரும்ஹ யோகி, பூர்ணப்ரும்ஹாநந்த யோகி எனும் இருதுறவிகளின் ஆசிபெற்றார். போன்சல வம்சாவளி யெனும் நூல் ஷஹாஜியின் சகோதரியும் யோகவழியைப் பின்பற்றினள் எனக்கூறுகிறது.

## முதற் சரபோஜி கி. பி. 1712—1728

ஷஹாஜிக்குப் பின் அவர் தம்பி முதற் சரபோஜி பட்டத்திற்கு வந்தார். மறவர்களுக்குள் ஏற்பட்ட கலகத்தை முதன் முதலில் தீர்த்து வைத்தார். அக்காலத்திய அத்வைத கீர்த்தனம் எனும் தமிழ் நூலிலும், சரபோஜி சரித்திரம் எனும் வடமொழி நூலிலும், காவிரியின் அணையில் ஓர் வெடிப்பு ஏற்பட்டு அவ்வணைக்கு ஆபத்து வரும் தருவாயிலிருந்ததாகவும், சரபோஜி அதை செப்பனிட்டதாகவும், எதிரிகள், அணையை தகர்த்துவிட முயன்றதாகவும் மன்னன் சரபோஜி அவர்களை விரட்டியடித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

சரபோஜியின் மந்திரியான ஆநந்த ராயரின் பேரில் வித்யாபரிணயம் என்ற நாடகம் வேதகவியினல் எழுதப்பட்டு, அது தஞ்சை ஆநந்தவல்லி அம்பாள் கோவில் உற்சவத்தில் நடிக்கப்பட்டு வந்ததாயும் தெரிகிறது. ஜகந்நாத கவியால் சரபராஜ விலாசம், ரதி மன்மத நாடகமும் இவர்காலத்தில் இயற்றப்பட்டுள. சிவபாரதம் எனும் வடமொழி நூல் சிவாஜி சரித்திரம் என தமிழாக்கத்தைக் கண்டது இவர்காலத்தில்தான். இவர் சதாரா வமிசத்தைச் சார்ந்த ஓர் பெண்ணை மணந்தார். இவருக்கு சந்தான பாக்யம் கிட்டவில்லை. இவர் ராணிதான் கருத்தரித்தாகப் பாசாங்கு செய்து ரூபி என்னும் ஸ்த்ரீயின் சிசுவை தான் பெற்றதாக உலகிற்கறிவித்ததாகவும், அவனுக்கு சாவாயி ஷஹாஜீ எனப் பெயர் வழங்கி வந்தது எனவும், இவ்வுண்மையை தன் சகோதரன் மூலம் அறிந்த சரபோஜி அவ்விராணியையும், புதல்வனையும் தஞ்சையைவிட்டு

அகற்றினன் என கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவனே பிற்காலத்தில் காட்டுராஜாவெனப் பெயருடன் தஞ்சை அரசிற்கு உரிமை கொண்டாடினன். கி பி. 1728 ஆண்டு சரபோஜி காலமாயினன். அவனுடன் சுலேக்ஷணபாயி, ராஜஸ்பாயி எனும் இரு இராணியார் உடன்கட்டை ஏறினர் என கல்வெட்டுகளில் கண்டுள்ளது.

**துக்கோஜீ** கி. பி. 1728—1736

முதல் சரபோஜிக்கு புதல்வனில்லாமையால், அவர் சகோதரர் அவன் பின் பட்டமடைந்தார். துக்கோஜி இராமநாதபுரம் தலைவனான பவானிசங்கரனுக்கு உதவி புரிந்தார். துக்கோஜி பலமொழி நிபுணர். ஹிந்துஸ்தானி சங்கீதம் தஞ்சையில் தழைக்க ஆரம்பித்தது இக்காலம் முதற்கொண்டே எனச்சொல்லலாம். சங்கீதசாராம்ருதம் எனும் நூலைத் துக்கோஜியே இயற்றினர். அவர்காலத்தில் கனச்யாம பண்டிதர் எனும் ஓர் புலவர் இருந்தார், மற்றோர் புலவர் மன்னம்பட்டர் என்பவர் அவர் 64 நூல்களை இயற்றியுள்ளதாகத் தெரியவருகிறது. இவருடைய மனைவியர் இருவர். சுந்தரி – கமலா எனப்பெயருடையோர் பெரும் புலமைப் பெற்றவர்கள். கனச்யாம பண்டிதர் அரசருடைய அந்தரங்க காரியதரிசியாகவும் இருந்து வந்தார். கி. பி. 1734-ம் ஆண்டில் சந்தாசாஹேப் எனும் முகலாயர் மதுரையைத் தாக்கினன். அச்சமயம் மதுரையை அரசு புரிந்த ராணி மீனாக்ஷிக்கு துக்கோஜி உதவினர் எனினும் சந்தாசாஹேப் திருச்சி

ராப்பள்ளியைக் கைப்பற்றிக்கொண்டார். திருச்சியை முகம்மதியர் கைப்பற்றியதால், தஞ்சாவூரைச் சுற்றி முகம்மதியர் ஆதிக்கம் அதிகரித்தது. முதலாய ஆதிக்கத்திற்கு உட்படாது தஞ்சை தலைதூக்கி நிற்கவேண்டுமாயின், அமைச்சர் சூரனுகவும், கடமை உணர்ச்சி உள்ளவனுகவும் இருக்கவேண்டும். ஆனல் தஞ்சை மந்திரியால் நிலையை சமாளிக்க இயலவில்லை அவரை குடிஜனங்கள் வெறுக்க தலைப்பட்டனர். துக்கோஜியின் இறுதிக் காலத்தில் தஞ்சையில் குழப்பங்களும், உள் நாட்டுக் கலகங்களும் அதிகரித்தன. தஞ்சை சிங்காதனத்திற்கு போட்டி ஏற்பட்டது. துக்கோஜி பட்டம் பெற்ற போது, (இரண்டாம்) ஏகோஜியின் வயது சுமார் 40 ஆகி இருந்தது. சாயாஜி எனும் ஓர் புதல்வன் இருந்ததாகவும் தெரிகிறது. தவிரவும் வாள்மணம் புரிந்த அன்னபூர்ணு எனும் ஸ்த்ரீயின் மூலம் பிரதாப் எனும் ஓர் புதல்வனும் இருந்தான். எனினும் துக்கோஜிக்குப் பிறகு தஞ்சை அரசு சுமார் நான்கு வருடங்கள் நினைக்க முடியாத சிக்கல்களாலும், குழப்பங்களாலும் பீடிக்கப்பட்டது. துக்கோஜி கி. பி. 1736-ல் பரலோகப்ராப்தி அடைந்தார்.

## இரண்டாம் ஏகோஜி – பாவா சாஹேப்

இரண்டாம் ஏகோஜி, துக்கோஜிக்கு பிறகு அரசுரிமைப் பெற்ருர். முகமதியர்களுடைய சூழ்ச்சிகளும், ஆதிக்கமும் தஞ்சையில் இந்த காலத்தில் பரவலாயின. பாவா ஸாஹேப் ஆட்சி ஒரே ஆண்டுதான் எனினும் அவர் தன் குலப்பெருமையை நிலைநாட்டும் ஆற்றல் மிகுந்

தவர். சையத் என்னும் முகலாயன் கோட்டைக்கு அதி காரியாக விருந்தான். சூழ்நிலையை தன் உயர்வுக்காக பயன் படுத்த எண்ணி, பாவா சாகேப்பை இரகசியமாக அப்புரப்படுத்த சூழ்ச்சிகளை உருவாக்கினன். இந் நிலையில் சந்தா சாஹேப் தஞ்சையைத் தாக்கினன். இந்நாட்களில் தஞ்சையின் பொக்கிஷ அரைகள், பல காரணங்களால், காலியாய் விட்டன. ஆயினும் தன் பரம்பரை தைர்யத்தை விட்டுக் கொடாமல் பாவா சாஹேப் போர்க்களத்தில் தானே சென்று சந்தா சாஹேப்பின் படைகளை விரட்டியடித்தார். இராஜாங்க சூழ் நிலை அபிவிருத்தியடைய ஓர் தனி அவை ஒன்று கூட்டி தக்கமனிதர்களைக்கொண்டு ஓர் சபை ஏற்படுத்தி னர். கி. பி. 1736-ல் பாவா சாஹேப் காலகதியானர்.

**சுஜானபாய்** கி. பி. 1736—1738.

சதிவேலைகளும், இராஜதுரோகமும் தலைப்படத் துடங்கியதைக் கொண்டு, பாவா சாஹேப்பின் மனைவி யாகிய சுஜானபாயை, அமைச்சர்கள் ஒன்று கூடி, அவ ருடைய கணவருக்கு பிறகு முடிசூட்டினர்கள். முதன் முதலாக தஞ்சை ராணியாரின் அரசுக்கு வந்தது. இராஜ வம்சத்தினருள் ஒற்றுமை யகல, சையத் தான் பலநாட்களாக எதிர்நோக்கிய தருணம் இதுவே என வறிந்து, காட்டு ராஜா வென்று பெயர் கொண்ட மாற்ற ருெருவனை தஞ்சையின் அரசனக்கினன். மந்திரி களுள் ஒருவனன சித்தோஜியையும், காட்டு ராஜா சிறைப்படுத்தி அவர்களை கோட்டை வாயிலில் காவு கொடுத்தான்.

**சாஹுஜி - காட்டுராஜா** கி. பி. 1738—1739.

அராஜகம் தஞ்சையில் நிலவியது. நெறி தவறாது அரசு செலுத்திய, சோழ, நாயக்க, மராத்திய மன்னர்கள் வீற்றிருந்த அரியாசனத்தில் சையத்தின் உதவியினல் ஷாஹுஜி அமர்ந்தான். ஏற்கனவே பிரஞ்சுக்காரர்களிடம் இவன் உதவி கோறி இருந்தமையால் தான் வாக்களித்தப்படி காரைக்காலை அவர்களுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டி வந்தது. தனது குறைபாடுகளை நன்கறிந்தமையால் காட்டுராஜா ஆங்கில, டச்சு ஆகிய அன்னியருதவியை பெரிதும் நாடி, அவர்களிடம் பெரும் நிலப்பகுதிகளை விட்டுக்கொடுத்து தன் அதிகாரத்தை நிலைநாட்ட எண்ணினன்.

காட்டுஇராஜா தஞ்சை அரசுக்கு உரிமையில்லாதவனென்று விஷயம் வெளியானதும், திருச்சி சந்தா சாஹேப், அவனைத்தாக்கி கைதாக்கினன். தஞ்சை குடிஜனங்களின் ஏகோபித்த அபிப்பிராயத்துக்கிணங்க கி. பி. 17.9-ம் ஆண்டில் பிரதாபசிம்ஹன் தஞ்சையின் அரசைப் பெற்ருர்.

**பிரதாப சிம்ஹன்** கி. பி. 1739—1763.

மராத்திய வம்ச அரசர்களின் பரம்பரையில் மிக்க செல்வாக்குடன் அரசுபுரிந்த கடைசி மன்னர் இவர் தான். பட்டத்திற்கு வந்த போது பெரும் செல்வாக்கும் கௌரவமும் அடைந்தார். சரித்திர பிரசித்திப் பெற்ற ராபர்ட் கிளைவும். கிழக்கிந்திய கம்பெனிக்காரர்களும் பிரதாபை "His Majesty" எனவே கடிதங்களில் குறிப்பிட்டனர். மஹம்மதலியும் கூட பிரதாபசிம்ஹரிடம் மிக்க மரியாதை செலுத்தினன். பிரதாப் பட்டமேற

விருப்பமற்றிருந்தும் குடி ஜனங்களின் விருப்பத்திற்கு இணங்கவே இப்பெரும் பதவியை ஏற்றுக் கொண்டு அதை முறையோடு பரிபாலித்தார்.

பெயருக்கேற்ப மிகுந்த பிரதாபசாலியாகவே இம் மன்னர் இருந்தார். இவர் காலத்தே வாழ்ந்த இரமகிருஷ்ண பண்டிதர் 'பிரதாபஸிம்மேந்திர விஜய ப்ரபந்தம்' எனும் மராத்தி நூலில் முகமதியர் படையெடுப்பை எதிர்த்துத் தோர்க்கடித்ததைப் பாடியுள்ளனர். சாஹு மஹாராஜாவின் தளகர்த்தரான ராகோஜி போன்சலேயும், பத்தேசிங்கும், பிரதாப சிம்மனுக்கு உதவி புரிந்தனர். திருச்சிராப்பள்ளியை கைப்பற்றிய முரார்ஜி என்பவர் தஞ்சையின்மேல் படை எடுத்த போது, பிரதாப சிம்ஹனின் சேனுதிபதி மானேஜியின் வீரத்தினுல், முரார்ஜியின் சேனைத்தலைவன் இனீஸ்கான் தலைதப்பி ஓட நேர்ந்தது. சந்தாசாகேப் பின் ஆளான மூகம்மத் அரப் என்பவன் ஒருவன் பெரும் படைத்திரட்டி தஞ்சையைத் தாக்க ஏற்பாடு செய்தான். தஞ்சைக் கோட்டைக் காவலனுகவிருந்த மல்லார்ஜி காடே என்பவரும் மானுஜியுமாக சேர்ந்து இவனை திருக்காட்டுப்பள்ளிக்கருகே தோற்கடித்து விட்டனர். மேலும் தேவிக்கோட்டையில் வர்த்தகம் செய்து வந்த ஆங்கிலேயர்கள் இருமுறை அத்துறைமுகத்தை தனதாக்கிக் கொள்ள முயன்று, பிரதாபின் சேனையினுல் தோற்கடிக்கப்பட்டனர். இது கி.பி. சுமார் 1749ம் ஆண்டில் நிகழ்ந்தது. ஆர்க்காட்டைச் சேர்ந்த அலி வர்த்திகான் தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட்ட போது அவனை முறியடித்து தோற்கச் செய்திடினும்

பிரதாபசிம்ஹன் தோல்வியுற்ற எதிரியை தக்க மரியாதைகளுடன் வரவேற்று ஆர்காட்டிற்கு அனுப்பி வைத்தார்.

பிரதாப மன்னனின் கீர்த்தி, போர்க்களத்தில் மட்டுமின்றி இலக்கியத் துறைகளிலும் உயர்ந்து நின்றது. பல நாடகங்கள், பக்தி மார்க்கத்தைப் பற்றிய நூல்கள் யாவும் இவர் தானாகவே இயற்றியுள்ளார். இவைகளில் சில புத்தகமாக வெளிவந்துள்ளன.

ஆங்கிலேயர் இக்காலத்தில் மிகவும் வலுவுடனிருந்தனர். தங்கள் ஆதிக்கத்தைப் பரவச் செய்ய தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். இவ்வர்த்தகக் கூட்டத்தினருக்கு மஹம்மது அலியின் உதவி பெருமளவில் இருந்து வந்தது. பிரதாபின் கடைசிகாலத்திலேயே தஞ்சைராஜ்யத்தில் கலகங்களும், மறைமுகமான எதிர்ப்புகளும் அதிகரித்துவிட்டன.

கி. பி. 1763ம் ஆண்டில் பிரதாபசிம்மர் இறுதி அடைந்தார்.

**துளஜராஜி** கி. பி. 1763—1787.

துளஜாஜி பெரும் புலமை வாய்ந்த மன்னர். பல பாஷைகளில் நிபுணர். வடமொழியில் நூல்களை இயற்றும் சக்தி படைத்தவர். ஆனால் அரசியலில் அவருடைய திறன் குறையுள்ளதாகவே இருந்தது.

பட்டத்திற்கு வந்தஉடன் தன் தந்தை இராமநாதபுரத்தில் இழந்த பிரதேசங்களைத் திரும்பப் பெற முயற்சியுற்றது மன்னியில், மறவர்களிடை நடந்த வாரசு போட்டியில் தலையிட்டுக் கொண்டார். கர்நாடக நவாபின்

ஆளுகையின் கீழ் மறவர்களிருந்து வந்தனர் ஆகை யால் துளஜாவின் தலைமீட்டை அவர் விரும்பவில்லை. நவாபின் சேனைகள் தஞ்சாவூரை வசப்படுத்திக் கொள்ள தஞ்சையை வலுவாகத் தாக்கின. ஆதலால் துளஜாஜி ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொள்ளும்படி நேர்ந்தது. அதன்படி, இருபது லக்ஷம் ரூபாய் துளஜாஜி நவாபுக்கு, கப்பம் கட்டவும் ஆங்கி லேயருக்கு ஹனுமந்தக்குடி, ஆரணி ஆகிய விடங்களை கோடுக்கவும் நேர்ந்தது. இவ்வாறு ஒப்பந்தப்படி நவாபிற்கு கொடுபட வேண்டிய துகை தவணை தவறிய தால் ஆங்கிலேயருடைய உதவியுடன் ஆர்காட்டு நவாபு 1773-ல் தஞ்சையை தாக்கி துளஜாவை சிறைப்படுத்தி ஞன். கி. பி. 1773-லிருந்து 1776-வரை நவாபின் ஆளு கைக்கு உட்பட்டிருந்தது தஞ்சை.

பின்னர், ஆங்கிலேயர்கள் திரும்பவும் துளஜா ஜியை தஞ்சை ராஜ்யத்திலமர்த்தி தஞ்சையில் ஆங்கி லப்படையை வைத்து, அதன் செலவையும், துளஜாவே ஏற்பதுடன் அவர்கட்கு பெருந்தொகை கப்பமாகக் கட்டவும் நேர்ந்தது.

கி பி. 1781-ல், ஹைதர் அலியின் சேனைகள் தஞ் சையில் மிகுந்த சேதத்தை விளைவித்தன. அவன் மகன் திப்பு சுல்தானும் தஞ்சையின் பொக்கிஷத்தை சூரையாடினுன். வருஷவரும்படி ஆர்காட் நவாபுக்கு கட்ட வேண்டிய கப்பத்திற்கே' போதியதாகவில்லை. இராஜ்யம் சீர்கேடான நிலைமைக்கு வந்துவிட்டது. கொடும் பஞ்சம் வேறு நாட்டில் பரவலாயிற்று.

49-வது வயதில் துளஜாராஜா இவ்வுலகைவிட்டகன்ஞர். அவருக்கு பின் பட்டத்திற்குறிய சந்ததிகள் இவருக்கு முன்பே காலமாகிவிட்டபடியால் அவர் தன் இஷ்டப்படி ஸ்வீகாரம் எடுத்துக் கொண்ட சரபோஜி என்னும் பையனுக்கு முடி சூட்டினர். தன் இளைய தாயார் புதல்வனுன அமர்சிங்கை சரபோஜியின் போஷகராக நியமித்தார்.

பின்னர் சரபோஜியின் ஸ்வீகாரம் செல்லத்தக்கதல்ல என ஆங்கிலேயரை நம்பச்செய்து, அன்னர் உதவி கொண்டு, ஆட்சிப் பொறுப்பை அமர்சிங் தானே ஏற்றனர். ஆயினும் கம்பெனியாருக்குக் கொடுபடவேண்டிய துகைகள் காலாகாலத்தில் செலுத்த வியலாமல் பாக்கிவிழுந்ததால், அமர்சிங்கிடம் கி. பி. 1790-ம் ஆண்டில் வேருெரு ஒப்பந்தம் செய்து கொண்டு, அதன்படி கம்பெனியாரே, நிலவரி வசூலை ஏற்றுக் கொண்டனர். ஆயினும் அமர்சிங் அரசுபுரிந்தகாலம் சுமார் பத்தே ஆண்டுகளாயினும் அவருடைய ஆட்சியை சரித்திராசிரியர் புகழ்கின்றனர்.

துளஜாவின் காலத்திலேயே மதஸ்தாபனத்திற்கே வந்த சுவாட்ஸ் எனும் பாதிரியார் சரபோஜிக்கு கல்வி கற்பித்து வந்தாரும். அவருடைய உதவியினுல் சரபோஜி அப்போது இராஜப் பிரதிநிதியாகவிருந்த காரன்வாலிஸ் பிரபுவிற்கு கடிதம் எழுதி, தானும் தனது பாயிசாஹிப் இராணிகளும், அமர்சிங்கினுல் பெரும் கொடுமைக்குள்ளாகிறேம், எனப்புகார் செய்து 1793-ல் நடந்த விசாரணை சரிவர நடைப்பெருததினுல் தான் தன்னுடைய ஸ்வீகாரம் நிராகரிக்கப்பட்டதென வாதாடினர். இவ்வாதம் ஏற்பட்டு 1796-ல் அமர்சிங் பதவியினின்றும் அகற்றப்பட்டார்.

**சரபோஜி கி. பி. 1798—1833**

துளஜாஜி ராஜாவின் ஆறு தலைமுறைக்கு முன், மாலோஜி, விடோஜி எனும் இரு மராத்திய தலைவர்கள் இருந்தனர். அவர்கள் பாபாஜி என்பவரின் புதல்வர்கள். இத்தலை முறையில் ஏழாவதாக ஷஹாஜி என்பவரிருந்தார். அவரின் புதல்வரே சரபோஜி. புத்திக் கூர்மை வாய்ந்த சரபோஜி, வளரும் ஆதிக்க முடைய ஆங்கிலேயர்களிடம் பணிவதைத் தவிர, அவர்களுடன் பகைப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்திருந்தார். தவிரவும் பாதிரியின் உதவியையும் ஆங்கிலேயர் உதவியையும் அவர் இறுதிவரை மறக்க வில்லை. ஆண்டு தோறும் ஒரு லக்ஷ பகோடாக்களும், ஜமாபந்திக் கூடுதலில் $\frac{1}{5}$-பங்கும் தனக்கு கொடுபட வேண்டுமென நிபந்தனையின் பேரில், சரபோஜி அரசியல் சிக்கல்களினின்றும் ஓய்வு பெற்றார்.

அரசாளும் பொறுப்பினின்று விலகிய சரபோஜி கல்வி கலாச்சார தொண்டில் முழுதளவு ஈடுபட்டனர். அதன் காரணமாய் அவர் புகழ் ஐரோப்பா முழுவதுமே பரவியது. ஸ்குவார்ட்ஸ் பாதிரியாருடைய நெருங்கிய தொடர்பினால் ஐரோப்பிய மொழிகள், கலாச்சாரம் முதலியவற்றில் நிபுணரானார். உலகில் இலக்கிய முன்னேற்றம் அடைந்த நாடுகளில் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள் எல்லாம் அவரால் தருவிக்கப்பட்டன. மேலும் பலதுறைகளிலும் ஆராய்ச்சிகளிலும், ஈடுபட்டனர். ஐரோப்பிய நாகரீகத்தையும் கலாசாரத்தையும் அதன் பயனால், நாட்டின் புராதன கலாசாரத்துடன், ஐரோப்பியபண்பாடுகளையும் இணைக்கும் முறைகளையும் ஆராய்ந்தார். தன் முன்னோர்களாலும், நாயக்க சோழ மன்னர்



சரபோஜி மன்னரின் சலவைக்கல் உருவச்சிலை.

களாலும்போற்றி வளர்க்கப்பட்ட சரஸ்வதிமஹால் நூல் நிலையத்தை இப்புனித தொண்டிற்கு ஏற்ற ஸ்தலமாகத் தேர்ந்தெடுத்தார். கலைகளில் ஆர்வமும், கலைகளை வளர்க்க அவர் அவாவும் அளவிட்டுச் சொல்ல இயலா. அவருடைய காலத்திற்கு முன் இந்நூலகம், நூல்களை சேகரித்து வைக்குமிடமாக மட்டுமிருந்தது. இவர் காலத்தில் அது உலகத்திலேயே ஈடற்றதொரு ஆராய்ச்சி மன்றமாகத் திகழ்ந்தது.

அச்சு இயந்திரசாலைகள் அப்போது முன்னேற்ற மடையவில்லை. சென்னை மாநிலத்தில் அச்சகங்கள் தோன்று முன்னரே, கற்களைக் கொண்டு உருவாக்கிய அச்சு முனைகளைப் பொருத்தப்பட்ட அச்சுக்களால், பல நூல்களை அச்சடித்தார். இந்நூல்கள் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் இன்றும் காணக்கிடைக்கின்றன.

அவர்காலத்தில் அவரைக்காண வந்த பல ஐரோப்பியர்கள், தங்கள் நூல்களில் அவரை வெகுவும் புகழ்கின்றனர். அவர் சேகரித்திருந்த அரிய பொக்கிஷங்களைப் பற்றி விவரித்துள்ளனர்.

காற்றூடி இயந்திரம், மின்சாரம் இயக்கும் இயந்திரம், தந்தத்தால் பொருத்தப்பட்ட: மனித எலும்புக் கூடு, இவைகளினின்றும் பலவகை ஆராய்ச்சிகளில் மன்னர் தன் நாட்களை கழித்தார் என்பது நன்கு விளங்கும்.

அவர் கண்ட ஆராய்ச்சியின் பயனாய் தக்க சிகிச்சை கண்டறியாத பல வியாதிகளுக்கு நிவாரணமளிக்கும் வைத்திய முறைகளை கண்டுபிடிக்கப்பட்டன.

'தன்வந்திரி மஹால்' எனப்பெயர் வழங்கி வந்த ஆராய்ச்சிக் கழகத்தை நிறுவி அதில் பல அனுபவம் பெற்ற வைத்தியர்களைக் கொண்டு, மருந்துகள் தயாரித்து, தீர்க்க முடியாதிருந்த பல பிணிகளை அகற்றுவதில் வெற்றிகண்டார். இவ்வராய்ச்சிகளை, தமிழுலகம் பயனுறுமாறு சுவடிகளில் தமிழ் புலவர்களைக் கொண்டு பாட்டு உருவத்தில் அவற்றை எழுதி வைக்கும் தொண்டை ஏற்றுக் கொண்டார்.

அவர்காலத்தில் தயாரிக்கப்பட்ட அழகிய சித்திரங்கள் சரஸ்வதி மஹாலில் இன்றும் எழில் குன்ருது விளங்குகின்றன.

அவர் அசுவ சாஸ்திரத்தை நன்று பயின்றிருந்தார். குதிரைகளின் குணங்களையும் இலக்கணங்களையும் எளிதில் உணறும் அறிவு கூர்மை அவருக்கு ஏற்பட்டிருந்தது.

பிஷப் ஹீப்பர் என்பவர் தன் நூலில் அவர் குறி தப்பாது துப்பாக்கி சுடுவதில் சாமர்த்தியம் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கிருர். வாலன்ஷியா எனும் உலக சுற்றுப்பிரயாணி அவர் நற்குணங்களைப் பெரிதும் பராட்டுகிருர்.

இசைத்துறையில் அவர் செய்த ஆராய்சிகள் பல. மேனாட்டுச் சங்கீதக்கருவியான பிடிலைக் கர்நாடகச் சங்கீத பக்கவாத்தியமாக அமைத்த பெருமை இவரையே சாரும். 'பான்ட்' எனும் மேலநாட்டு மேள வாத்தியங்களைக் கொண்டு கர்நாடகச் சங்கீதம் பயில வைத்து, இதில் வெற்றிகண்டு, பான்ட் வாத்திய குழா

மை இந்தியாவில் திருவிழாச் காலங்களிலும், திருமணம் முதலிய வகைகளிலும் இன்னிசைக்காக முதல் முதலில் ஏற்படுத்திய புகழ் இவரைச் சார்ந்தது.

நம் நாட்டுச் சங்கீதத்தைப் பாண்டு வாத்திய குழாயில் வாசிக்க மெட்டு அமைத்து, மேல் நாட்டுமுறையில் ஸ்வரக்குறிப்புடன் அவைகளை புத்தக மூலம் உலகிற்குத் தெரியப்படுத்தியதும் இவரே.

இராயல் ஏஷியாடிக் சொஸைட்டி எனும் கல்வி ஸ்தாபனத்தில் அங்கத்தினராக ஏற்கப்பட்ட முதல் இந்தியரெனும் பெருமைப் பெற்றார்.

இவர் வடஇந்திய யாத்திரைச் சென்ற போதும், தென் இந்தியாவில் பல இடங்களுக்குச் சென்ற போதும் அங்கங்கே கிடைக்கக் கூடிய ஓலைச்சுவடிகளையும், ஏட்டுச் சுவடிகளையும் பரிசீலனை செய்து, மிக்கப் பொருள் கொடுத்து ஸரஸ்வதி மஹாலில் அவைகளை சேகரித்து வைத்தார்.

இவர் ஏற்படுத்திய 'நவ வித்யா கலா நிதிசாலா' எனும் கல்வி ஸ்தாபனத்தின் மூலம் ஆங்கில பாஷையையும், விக்ஞானம், பூகோளம், முதலிய விஷயங்களில் முன்னேற்றமடைந்திருந்த நாடுகளில் அங்குள்ள பேராசிரியர்களால் கண்ட பேருண்மைகளையும் போதிக்க ஏற்பாடு செய்திருந்தார். சரஸ்வதி மஹாலில் உள்ள 'மோடி' ஏடுகளில் இவ்விஷயங்களைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

தான் அறிந்ததையும், பார்த்ததையும், பயனுறச் செய்வதில் பெரும் அக்கரை கொண்டவர் சரபோஜி.

அவர் தானே எழுதிய பல யக்ஷகானங்கள், மராத்தி மொழியில் இருக்கின்றன. குறவஞ்சியை முதன்முதலாக மராத்திமொழியில் உருவகம் செய்தவர் இவரே.

இதேபோல், சேக்கிழாரின் நூலை ஆதாரமாகக் கொண்டு 'பக்த விலாசம்' எனும் மராத்தி நூலை தயாரிக்கச் செய்தது இவர்காலத்தில்தான். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப்பட்ட சரபேந்திர பூபால குரவஞ்சி இவரைப்பற்றி எழுதப்பட்டதே. இன மொழிப் பற்றற்று மனிதவர்க்கத்தையே ஒரே சமுதாயமாகக் காணும் பரந்த நோக்கம் இவரிடம் இருந்தது. தன் மூதாதையர்கள் போரில் கண்ட வெற்றிகளை இவர் கல்வி கலாச்சாரத் துறையில் கண்டார். இவர் கி. பி. 1832-ம் ஆண்டு வரை வாழ்ந்தார்.

சரபோஜிக்குப் பின் அவர் புதல்வர் சிவாஜி தஞ்சையை கி. பி. 1855 வரை ஆண்டு வந்தார். அவருக்குச் சந்ததியில்லாததைக் காரணமாகக் கொண்டு ஆங்கிலேயர் தஞ்சையைக் கைப்பற்ற, மராட்டிய ஆட்சி முடிவுற்றது.